உ

சிவமயம்

ஸ்ரீ உமாமகேச்வராப்யாம் நம:

காமிகாகமம்

𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌗𑌮𑌃

இரியா பாதப் பூர்வ பாகம்
தமிழ் சந்திரிகையுடன்

(முதற் பகுதி)

வெளியிடுபவர்
சிவஸ்ரீ சி. சுவாமிநாத சிவாசாரியர் அவர்கள்
தென்னிந்திய அர்ச்சகர் சங்க பொதுக் காரியதரிசி

தென்னிந்திய அர்ச்சகர் சங்கம்
11, தம்புசெட்டித் தெரு, சென்னை-1
(நள ௵ தை ௴)
1977

South Indian Archakar Association
(Regd. No. 39/1950, Madras)
11, Thambu Chetty Street
Madras-1

C. Swaminatha Gurukkal
Secretary, South Indian Archakar Association

Price : Rs. 50

Solar Works, Madras-1

உ

ஶ்ரீ குருப்யோ நம: ॥

ஸதாஶிவ[illegible] ஶ்ரீகண்ட[illegible] ।
[illegible] விஷ்ணு[illegible] ॥
ஸதாஶிவ[illegible] ஶ்ரீகண்ட[illegible] ।
[illegible] ॥

பதிப்புரை

சிவாலயங்களில் சிவாகமங்களைப் பின்பற்றியே நித்திய நைமித்திக காம்மிய பூஜாக் கிரியைகள் யாவும் நடைபெற்றுவருகிறது. ஆதிசைவர்களாகிய சிவாசாரியர்களும் சிவதீக்ஷை பெற்ற நான்கு வர்ணத்தினரும் ஆன்மார்த்த பூஜை முதலான நித்ய நைமித்திகாதி மதச்சடங்குகளை அவரவர் குலாதிகாரத்திற்கேற்ப ஆகமோக்தமாகத் தனித்தேனும், வைதிகக்கிரியைகளுடன் கலந்தேனும் செய்ய வேண்டுமென்னும் விதியை அநுசரித்தே செய்யப்பட்டு வருகிறது. சைவசமய சம்பந்தமான ஆன்மார்த்த கிரியைகளையும், கர்ஷணம் முதல் பிரதிஷ்டை வரை, பிரதிஷ்டை முதல் உற்சவம் வரை, உற்சவம் முதல் பிராயச்சித்தம் வரை பரார்த்த கிரியைகளையும் விளக்கிக் கூறும் மூல ஆகமங்கள் இருபத்தெட்டு. அவற்றுள் முதன்மையானது காமிகாகமம். காமிகாகமத்தின் கிரியாபாதம் பூர்வபாக மென்றும் உத்திர பாக மென்றும் இரண்டு பகுதியை யுடையது. தென்னாட்டிலுள்ள பெரும்பாலான சிவாலயங்கள் காமிகாகமத்தின்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு, அதன்படியே அவைகளில் நித்திய நைமித்திய பூஜாக் கிரியைகள் செய்து வரப்படுகிறது.

எனவே காமிகாகமத்தின் பூர்வபாகம் உத்திரபாகம் என்னும் இரண்டு பகுதிகளையும் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே விகாரி, ஆடி, 30(13—8—1899)-ல் சென்னை, சிந்தாதரிப் பேட்டை சிவஞான போத யந்திரசாலை உரிமையாளர் உயர்திரு கோ. ஷண்முகசுந்தர முதலியார் அவர்களாலும், பின்பு அன்னாருடைய பேரர் உயர்திரு மயிலை அழகப்ப முதலியார் அவர்களாலும் வேதாகம விற்பன்னர்களைக் கொண்டு ஓலைச்சுவடிகளைப் பரிசோதித்து கிரந்த லிபியில் மூலமும், பதச்சேதமும், தமிழில் பதவுரை தாத்பர்யம் சந்திரிகையுடனும் விரிவான முறையில் அச்சிட்டு, சைவசமய பெருமக்கட்கு எளிதிற் கிடைக்குமாறு செய்தனர். அப்பதிப்பு தற்சமயம் பார்வைக்குக்கூட கிடைப்பது அரிதாகிவிட்டபடியால் பலர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, முன்னமே யாம் தேவநாகர லிபியில் தயாரித்து கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்த காமிகாகமம் பூர்வ பாகத்தை, திரு ஆவடுதுறை ஆகமப் பிரவீண சிவஸ்ரீ க. சுவாமிநாத

சிவாசாரியார் அவர்களைக் கொண்டு பரிசோதித்து, மேற்கண்ட உயர் திரு. மயிலை அழகப்ப முதலியார் அவர்கள் சந்ததியாரால் அளிக்கப் பட்ட உரிமையுடன் அச்சிட்டு, தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தின் சார்பில் சென்ற 11—2—76ல் ஸ்ரீகாஞ்சி ஏகாம்பரநாதர் சன்னதியில் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து தென்னாட்டிலுள்ள ஆஸ்திக பெருமக்கட்கு பெரிதும் பயன்படக் கூடியதாக கிரந்த லிபி யில் மூலமும், மூலசுலோகத்தின் நேர்தமிழ்ப் பொழிப்புரையாகிய படல சந்த்ரிகையுடனும் காமிகாகம பூர்வபாகத்தின் முதற் பகுதி திருஅருட்துணையினால் அச்சுவேலை நிறைவு பெற்று இப்போது வெளியிடப்படுகிறது.

இந்நூல் சிறந்த முறையில் வெளிவருவதற்கு பிரதிகளை பரிசோதித்து பிழை திருத்தி உதவிய திரு ஆவடுதுறை ஆகமப் பிரவீண சிவஸ்ரீ க. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். மற்றும் இந்நூல் விரைவில் வெளிவர வேண்டு மென்று பேரவாக் கொண்டு நேரில் அவ்வப் போது ஊக்குவித்து உதவிய கடலூர் உயர்திரு தி. கி. நாராயண சாமி நாயுடு அவர்களுக்கும், அச்சு புரூப் திருத்தம் செய்தும், விஷயதீபிகை சுத்தாசுத்தம் முதலானப் பகுதிகளைத் தொகுத்தும் உதவிய, சென்னிமலை சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார் அவர்களுடைய ஞானபுத்திர சீடர்களில் ஒருவராகிய சிவத்திரு ஈசானதேவன் பெ. ஏ. கபாலி அவர்கட்கும் எனது நன்றி கலந்த ஆசீர்வாதம் உரித்தாகுக.

இந்நூலின் அச்சுக்கோர்வை எமது சொந்த சாதனங் களைக் கொண்டு சங்கத்தின் தனிப்பட்ட பணியாட்களால் செய்யப் பட்டு, சென்னை சோலார் ஓர்க்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. மேற்படி பணியாளர்களுக்கும் அச்சக உரிமையாளருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சிவாசாரிய சமூகத்தினரும், சைவசமயாசார பற்றுடையவர் களும், சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களும் இந்நூலை வாங்கி வாசித்து பயனடைந்து இதனுடைய பிற பகுதிகளை விரைவில் வெளி யிடுவதற்கு ஊக்கமளித்து உதவவேண்டுகிறேன், தமிழ்நாடு இந்து அறநிலைய ஆணையர் அவர்கள், தமது ஆணைக்குட்பட்ட சிவாலயங் களில் பணிபுரியும் அர்ச்சகர் மற்றும் நிர்வாகத்தினர் வாசித்துப் பயனடைவதற்காக இந்நூலை வாங்குவதற்கு, இலாகா பூர்வமான ஆணையை பிறப்பித்து உதவுமாறும் வேண்டுகிறேன்.

ஸ்ரீகண்டபரமாசாரிய மூர்த்திகளின் திருவடி வாழ்க.

சென்னை-1
நள ஞூ தை மீ
31—1—1977

சி. சுவாமிநாத குருக்கள்
பொதுக் காரியதரிசி
தென்னிந்திய அர்ச்சகர் சங்கம்

உ

சிவமயம்

முன்னுரை

—::—

[illegible] ।

[illegible] ॥

உலகம் ஆன்மவர்க்கத்தின் பொருட்டு சங்காரகாரணனாகிய முதல்வனது ஆணையாற் சிருஷ்டி திதி சங்கார மெனும் முத்தொழிற் படுவது. இவற்றுள் சிருஷ்டி திதியெனும் இரண்டும் ஆன்மாக்களை நல்வினை தீவினை என்னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்புள் எண்பத்துநான்கு நூராயிர யோனி பேதத்தினும் கறங்குஞ் சகடமும் போல மீளமீளப் பிறந்து இறந்து உழன்று வரச்செய்து, அதனால் இருவினை ஒப்பும் மலபரிபாகமும் வருமளவிற் பன்னாள் அலமருதற் கண்ணுற்றருளி மேலாம் பரமுத்தி யிற் சேர்ப்பித்தற்கே ஆம். சங்காரம் அவ்வாறு பிறந்து இறந்து உழன்று வரும் ஆன்மாக்களை இளைப்பாரச் செய்தற்காம். சங்காரம் ஐவகைப்படும். அவற்றுள் இறுதிக்கண்ணதாகிய மஹாசங்கார கால முடிவின்கண், சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்ச மெனும் இருவகைப் பிரபஞ்சங்களையும் ஒடுங்கியவாறே மீளப் படைத்தற் பொருட்டு அகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம் பாகியப் பரசிவத்தினுடைய பராசத்தி, சுத்தமாயையை நோக்கிய வழி, அவபோத ரூபமாய்ப் பரசிவத்தின் இடத்திலிருக்கும் வேதா கமங்கள் சுத்தமாயையினின்றும் ருக் மற்றும் காமிக முதலிய பேதந் தோன்றுது சூக்குமைவாக்கு ரூபமான நாதவடிவாயும், அதன்பின் பைசந்திவாக்கு ரூபமான விந்து வடிவாயும், அதன்பின் மத்திமை வாக்கு ரூபமான அக்ஷர வடிவாயும் முறையே தோன்றின. பின் அவற்றைச் சூக்கும வைகரிவாக்கு ரூபமாய்ச் சொற்றொடர்ப் படுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க்கு அருளிச் செய்தற் பொருட்டுப் பரசிவம், ஈசான முதலிய பஞ்சப் பிரம மநூக்களாகிய சத்திகளே திருமுடி முதலிய அவயவங்களாகச் சகள நிட்களத் திருமேனி கொண்டருளிச் சதாசிவமூர்த்தியாய் நின்று, தற்புருடம் முதலிய நான்கு திருமுகங் களான் வேதங்களைத் தோற்றுவித்தும், மேற்கண்ணதாகிய ஈசான முதலிய ஈசான சம்பந்த ஊர்த்துவத் திருமுகங்கள் ஐந்தனுள் சத்யோஜாத முகத்தினின்றும் காமிகம், யோகஜம், சித்தியம்,

காரணம், அஜிதம் என்னும் ஐந்து ஆகமங்களும், வாமதேவ முகத்தினின்றும் தீப்தம், சூக்ஷ்மம், சஹச்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்னும் ஐந்து ஆகமங்களும், அகோரமுகத்தினின்றும் விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், ஆக்நேயம், வீரம் என்னும் ஐந்து ஆகமங்களும், தற்புருஷ முகத்தினின்றும் ரௌரவம், மகுடம், விமலம், சந்த்ரஞ்ஞானம், முகபிம்பம் என்னும் ஐந்து ஆகமங்களும், ஈசான முகத்தினின்றும் ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்னும் எட்டு ஆகமங்களும் ஆக இருபத்தெட்டு மூல ஆகமங்களைத் தோற்றுவித்தும், இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட ருக் முதலான வேதங்களையும் காமிகாதி சிவாகமங்களையும் அனுஷ்டுப் சந்தமாக அநேக கோடி சங்கியையாகப் பண்ணி, வேதங்களை அநந்ததேவர் வழியானே பிரமதேவருக்கு அருளிச்செய்து, சிவாகமங்களை பிரதிசங்கிதை (ஒரு விஷயத்தை வேறுவேறு வகுத்துக்கூறுதல்) முறையானே பிரணவர் முதலிய பத்து பேரும் மஹாருத்திரர் முதலிய பதினெட்டு பேருமாகிய இருபத்தெட்டு பேருக்கும் சிவபேதம், உருத்திர பேதம் எனப் பகுத்து ஒரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச் செய்து பின்பு மகௌக (வேறுவேறாக வகுக்கப்பட்ட பலவற்றையும் திரட்டிக் கூறுதல்) முறையானே அந்த இருபத்தெட்டினையும் வித்யேசர் எண்மரின் முதல்வராகிய அநந்த தேவருக்கு அருளிச் செய்தான்.

அவற்றை அநந்ததேவர், தூலவைகரி வாக்கு ரூபமாய், நூற்றுப் பதினெட்டு உருத்திரரின் முதல்வராகிய ஸ்ரீகண்டருத்திரருக்கு அருளிச் செய்தார். அவற்றை ஸ்ரீகண்டருத்திரர் கணங்கட்கும் தேவர்கட்கும் முனிவர்கட்கும் அளித்தற் பொருட்டு முதலில் நந்திப் பெருமானுக்கு அருளிச் செய்தார். இது வேதம் ஆகமங்கள் வந்த வரலாறு.

பின்பு அவற்றை ஸ்ரீகண்டருத்திரர் சிவசிருஷ்டாள் என்றும் பிரம்ம சிருஷ்டாள் என்றும் இருவகையினரான கௌசிகாதி பெயர் மாத்திரமே ஒற்றுமையுடைய முனிவர்களில், பரார்த்த பூஜையில் அதிகாரிகளான சிவசிருஷ்டாளாகிய கௌசிகர், காசிபர், பரத்துவாஜர், கௌதமர், அகத்தியர் என்னும் ஐந்து கோத்திர சிவமுனிவர்கட்கு அருளிச் செய்தார்.

வேதம் நான்கும், பிரமகாண்டமும் பிரமகாண்டத்திற்கு நிமித்தமாகிய கருமகாண்டமும் உணர்த்துவனவாம். பிரமகாண்டம் உபநிடதம், வேதாந்தம், வேதசிரசு, பிரபலசுருதி எனப் பெயர் பெறும். வேதத்துக்கு வழிநூல் பதினெட்டுப் புராணங்களும் பதினெட்டு ஸ்மிருதிகளுமாம், சார்பு நூல் சிக்ஷை, கற்பசூத்திரம் முதலிய வேத அங்கங்களுமாம்.

வேதம், யஞ்ஞாதி கருமங்களைச் செய்து புண்ணிய உலகங்களை அடைய விரும்பும் உலகர் பொருட்டும், ஆகமம் சிவசாலோக்ய சிவசாமீப்ய சிவசாரூப்ய சிவசாயூச்சியங்களை அடைய விரும்புஞ் சத்திநிபாத முடையார் பொருட்டும் அருளிச் செய்யப்பட்டன.

இன்னும் சத்யோஜாதம் முதலாக ஐந்து முகங்களினும் முறையே லௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம் மாந்திரம் என்னும் ஐந்தும் தோன்றின எனச் சிவாகமங்கள் கூறும். லௌகிக நூல், ஆயுள் வேதமும் தண்டநீதி முதலாயின. வைதிக நூல் மீமாஞ்சையும் நியாயமும் வைசேடிகமும் ஆகிய மூன்றுமாம். அத்யான்மிக நூல், சாங்கியமும் பாதஞ்சலமும் வேதாந்தமுமாகிய மூன்றுமாம். அதிமார்க்க நூல் பாசுபதமும் காபாலமும் மாவிரதமும் ஆகிய மூன்றுமாம். மாந்திரநூல், சித்தாந்த சாத்திரம் ஆம். லௌகிகத்தினும் உயர்ந்தது வைதிகம்; அதனினும் உயர்ந்தது அத்தியான்மிகம்; அதினும் உயர்ந்தது அதிமார்க்கம்; அதினும் உயர்ந்தது மாந்திரம். மாந்திரம் சிவாகமம், தந்திரம், சித்தாந்தம் எனப் பெயர் பெறும்.

சிவாகமங்கள், ஞானபாதம் யோகபாதம் கிரியாபாதம் சரியா பாதம் என்று தனித்தனியே நான்கு பாதங்களை உடையனவாய் இருக்கும்.

ஞானபாதத்தில் சிவபெருமானுடைய சொரூபமும், விஞ்ஞான கலர், பிரளயாகலர் சகலர், என்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தி என்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவ முதற் பிருதிவிதத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களது உற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியாம் முறைமையும் புவனங்கள், புவனேசர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அதமப் பிரளயம் மத்திமப் பிரளயம் மகாப் பிரளயங்களின் சொரூபமும், அந்தப் பிரளயங்களின் பின்னர்ச் சிருஷ்டியாம் முறையும், பாசுபதம், மாவிரதம், காபால முதலிய மதங்களின் சொரூபமும் கூறப்படும்.

இனிக் கிரியாபாதத்தில் மந்திரங்களின் உத்தாரணம், சந்தியா வந்தனம், பூஜை, ஜெபம் ஹோமங்களும், சமய விசேஷ நிருவாண ஆசாரியாபிஷேகங்களும், புத்தி முத்திகளுக்கு உபாயமாகிய தீக்ஷையும் கூறப்படும்.

இனி யோகபாதத்தில் முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சகத்துக்குக்

காரணம் ஆகிய மாயை மகாமாயைகளைக் காணும் வல்லமையும் இயமம், நியமம், ஆசனம். பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணம், சமாதிகளுடைய முறைமையும் மூலாதாரம் முதலிய ஆராதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

இனிச் சரியாபாதத்தில் பிராயச்சித்த விதியும், பவித்திர விதியும், சிவலிங்க இலக்கணமும், உமாமகேசுரர் முதலிய வியக்தா வியக்த லிங்கங்களின் இலக்கணமும், நந்தி முதலிய கணநாதர் இலக்கணமும் ஜெபமாலை, யோகபட்டம், தண்டம், கமண்டலம் முதலியவற்றின் இலக்கணமும், அந்தியேஷ்டி விதியும் சிரார்த்தவிதியும் கூறப்படும்.

இனிச் சைவாகமங்களைச் சொன்னவர் கேட்டவர்களுடைய பேதத்தினாலே, பரம் மஹான் அந்தராளம் திவ்யம் திவ்யாதிவ்யம் அதிவ்யம் என ஆறு விதமான சம்பந்தம் கூறப்படும். அஃது எவ்வாறு என்னில் சதாசிவர் அநந்தேச்வரர் சம்பந்தம் பரம் என்றும், அநந்தேச்வரர் ஸ்ரீகண்டபரமேச்வரர் சம்பந்தம் மஹான் என்றும், ஸ்ரீகண்டபரமேச்வரர் இந்திராதி தேவர்கள் சம்பந்தம் அந்தராளம் என்றும், இந்திராதி தேவர்கள், தேவருஷிகள் சம்பந்தம் திவ்யம் என்றும், தேவருஷிகள் மனுஷருஷிகள் சம்பந்தம் திவ்யாதிவ்யம் என்றும், மனுஷ்யருஷி மனுஷ்யர் சம்பந்தம் அதிவ்யம் என்றும் ஆறுவிதமாம்.

ஆகம சம்பந்தமும் அநந்தேச்வராதி சம்பந்தம் என்றும், பிரணவாதி சம்பந்தம் என்றும் இருவகையாம். மேல் கூறியது அநந்தேச்வராதி சம்பந்தம். பிரணவாதி சம்பந்தம் இந்தப்படியே யோஜிக்கத் தக்கது.

அவ்விடத்து சிவ பிரணவ சம்பந்தம் பரமென்றும், பிரணவ திரிகல சம்பந்தம் மஹானென்றும், திரிகல ஹர சம்பந்தம் அந்தராளமென்றும், ஹர தேவ சம்பந்தம் திவ்யமென்றும், தேவ ருஷி சம்பந்தம் திவ்யாதிவ்யமென்றும், ருஷி மனுஷ சம்பந்தம் அதிவ்யமென்றும் இப்படி சம்பந்தம் ஆறு விதமாகும். இந்தப்படி சிவபேதங்களுக்கு சம்பந்தம் அறியத்தக்கது.

உருத்திர பேதங்களுக்கு சம்பந்தம் ஐந்து விதமாகும். அஃது எவ்வாறு எனில் சிவனுக்கும் அநாதிருத்திரருக்கும் உண்டான ஆகம சம்பந்தம் பரமென்றும், அநாதிருத்திர பரமேச சம்பந்தம் மஹானென்றும், பரமேச தேவ சம்பந்தம் திவ்யமென்றும், தேவ ருஷி சம்பந்தம் திவ்யாதிவ்யமென்றும், ருஷி மனுஷ்ய சம்பந்தம் அதிவ்யமென்றும் ஐந்து விதமாகும்.

இப்படிக் கன்மமார்க்க ஞானமார்க்கங்களைப் போதிக்கும் வேத சிவாகமங்கள் பரசிவம் முதலாகச் சந்தானக்கிரம சம்பிரதாயம் இடைவிடாமல் குரு சிஷ்ய பராம்பர்யமாய் வருகிற படியினாலும், பரமாப்த சிவப்பிரணீதம் ஆகையானும் (சிவவாக்யமாகையானும்) தடையற்ற பிரமாண நூல் என்பது ஸித்தம். மற்றும் அவை அவபோத ரூபமாகப் பரசிவத்தினிடத்து இருப்பதால் நித்யமும் ஆகும்.

எனவே மனுஷ்யாதி ருஷி; இந்திராதி தேவ; பிரஹ்மாதி உருத்திர ப்ரோக்தமானதும், சமுத்திர கலச நியாயமாக வேத சிவாகமங்களினின்று ஒரோஒன்றே பற்றி செய்ததும், வேதசிவாகம விருத்தமானதுமான சாத்திரங்கள் ப்ரோக்தாக்களின் (சொன்னவர்களின்) தாரதம்யத்திற்கு ஏற்ப கீழ்கீழ்ச் சாத்திரங்கள் மேன்மேற் சாத்திரங்களால் மறுக்கத்தக்கது. சதாசிவோக்த சாத்திரமான வேத சிவாகமங்கள் யாதொன்றினாலும் பாதிக்கப்படுவது அன்று; ஆகையால், வேதசிவாகமங்கள் ருத்ராதி மனுஷ்ய ப்ரோக்தமான சாஸ்திரங்களுக்குப் பிரமாணம் ஆகுமே அல்லது அவையாதும் வேதசிவாகமங்கட்கு பிரமாணம் ஆகாது என்பது ஸித்தம். இன்னும் ருத்ராதி மனுஷ்ய ப்ரோக்தமான சாத்திரங்களில் எந்தெந்த சாத்திரத்திற்கு எத்தனை தத்துவங்கள் வரை வியாப்தியானது அறியப்படுகிறதோ அந்தந்த சாஸ்திரத்திற்கு அவ்அவ்வளவு பர்யந்தமெ பிரமாண யோக்யமாம் என்பது பிரசித்தம்.

இனி பரசிவம் சதாசிவமூர்த்தியாய் நின்று அநந்ததேவருக்கு உபதேசிக்கப்பட்டுள்ள இவ் ஆகமங்களின் தனித்தனியே பரார்த்தம் முதலான கிரந்த சங்க்கியையை, அநந்ததேவர் முதலானவர்களால் உபதேசக் கிரமமாகக் கேட்போர் பக்குவ பேதங்கட்கும் கற்ப பேதங்கட்கும் ஏற்ப ஒருவர்பின் னொருவராக முறையே சுருக்கி உபதேசிக்கப்பட்டுள்ளது. இன்னும் இதனை விரிக்கிற் பெருகும்; ஆகமங்களிலும் சைவமாபாஷ்யங்கள் முதலான ஞானநூல்களிலும் பரக்கக் காணலாம்.

இனி மேற்கூறிப் போந்த சிவாகமங்களுள் ஒரு சிலவே ஓலைச் சுவடி, கையெழுத்துப் பிரதி, அச்சுப் புத்தகம் முதலான வடிவில் ஜீரணமாகும் நிலையில் ஒரு சிலரிடம் மட்டும் கிடைத்தற்கு அரிய கருவூலமாகப் பேணி காத்துப் போற்றப்பட்டு வருகிறது. பெரும்பாலானவை நம் தவக் குறைவினாலும் காலத்திற்கு ஏற்பவும் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விட்டதெனவே கொள்ளலாம். அரிதிற் கிடைக்கக் கூடியவற்றையேனும், சமயப் பற்றுடையார்க்கும் மற்றும் சமய ஆராய்ச்சியாளர்க்கும் எளிதிற் கிடைக்கச் செய்து இதனால் நூல் மறைந்துவிடாமற் காப்பாற்ற வேண்டும் என்னும்

பேரவாவினால், தென்னிந்திய அர்ச்சகர் சங்கப் பொதுக் காரியதரிசி சிவஸ்ரீ சி. சுவாமிநாத குருக்கள் அவர்கள், மேற்படி சங்கத்தின் சார்பில் அவ்வப்போது வெளியிடப்பட்டு வரும் சமயப் பெருநூல்களைப் போலவே, இருபத்தெட்டு மூலாகமங்களுள் முதன்மையானதும் பிரசித்தமானப் பிரயோகப் பிரமாணம் ஆனதுமான காமிகாகம கிரியாபாதத்தின் பூர்வபாகத்தை நாகரலிபியில் சென்ற ஆண்டு வெளியிடப்பட்டுப் பிரசித்தப்படுத்தியுள்ளது ஆஸ்தீக உலகம் அறியும். இதை அடி ஒற்றி கிரந்த லிபியில் தமிழ்ச் சந்த்ரிகையுடன் மேற்கண்ட பூர்வபாகத்தின் முதற்பகுதி தற்சமயம் வெளிவருவது, தென்னிந்திய சிவாசாரியர்கட்கும் ஆஸ்திக சைவ பெருமக்கட்கும் பெருமகிழ்ச்சியைத் தருவதாகும்.

செயற்கரிய செயலாகிய இச் சிவபுண்ணியத்தை, தமது வயது முதிர்ந்த நிலையில் அயராது செயற்பட்டு நிறைவேற்றி சமயப்பயிர் வளர்க்கும் சிவஸ்ரீ சி. சுவாமிநாத குருக்கள் அவர்களுக்கு என்றும் இன்பம் பெருக, நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் பிரசாதித்து அருள்பாலிக்க திருக்கைலாய பரம்பரை ஆமர்த்தமட துர்வாச மாமுனி சந்தான ஸ்ரீகண்டபரமாசாரிய மூர்த்தியின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

இப் பெருநூலின் பிறபகுதிகளும் விரைவில் வெளிவருவதற்கு அயராது ஆவன செய்து வரும் அன்னாருக்கு ஒல்லும் வகையால் உறுதுணை யோவாதே செய்து, நன்றி செலுத்தக் கடமைப்பட்டு உள்ளது சைவ உலகம்.

சென்னை,
31—1—1977

ஈசான தேவன்
பெ. ஏ. கபாலி

—:※:—

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ். அவர்கள் அளித்த அணிந்துரை

பழமையும் பெருமையும் மிக்க நமது இந்து மதம், சைவம் வைணவம் சாக்தம், கணபத்தியம், சௌரம் என்னும் சமயங்களையெல்லாம், தன்னகத்தே பொதிந்துக்கொண்டு சிறந்தோங்கித் திகழ்வது. இந்து மதத்திற்கும், அதனைச் சார்ந்த சைவம் வைணவம் சாக்தம் முதலிய சமயங்களுக்கும், அடிப்படைப் பிரமாண நூல்களாக அமைந்து திகழ்வன, வேதம், ஆகமம் என்னும் இருவகை நூல்களாகும்.

"வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுமுள்ளன"

என்று திருமூலர், தமது திருமந்திரத்தில், வேத ஆகமங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். வேதம், அனைவர்க்கும் உரிய பொது நூல்; ஆகமங்கள், அவ் அச் சமயத்தார்க்கே உரிய சிறப்பு நூல்கள். வேதம் உலகியல் ஒழுகலாற்றை வகுத்துக் கூறுவது. ஆகமம் அவ் அச் சமயத்தார்க்குரிய அருளியல் விளக்கி உரைப்பது.

"ஆரண நூல் பொது, ஆகமம் அருஞ்சிறப்பு நூலாம்" என்றும், "நீதியினால் இவை உலகர்க்கும் சத்திநிபாதற்கும் நிகழ்த்தியன" என்றும், சிவஞானசித்தி ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியார் குறிப்பிடுகின்றார். வேதத்தைப் போலவே ஆகமங்களும் முதன்மையும் சிறப்பும் உடையன ஆகும்.

சைவசமயத்திற்குச் சிவாகமங்களும், வைஷ்ணசமயத்திற்குப் பாஞ்சராத்திரம், வைகானசம் என்னும் ஆகமங்களும், சாக்த சமயத்திற்குச் சாக்த ஆகமங்களும், பிரமாண நூல்களாக அமைந்துள்ளன. சைவாகமங்கள் காமிகம், வாதுளம் முதலாக 28 ஆகும். "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று மணிவாசகரும், ஆகம சீலர்க்கு அருள் நல்கும் பெம்மானே" என்று சுந்தரமூர்த்திசுவாமிகளும் அருளிச் செய்திருப்பதனால், ஆகமங்களின் சிறப்பு வலியுறுத்தப் பெற்றிருத்தல் காணலாம். "வேதம் சிவாகமம் இரண்டிலும், பஞ்சப்பிரமம் - பிரணவம் - பஞ்சாக்கரம் - பிராசாதம் முதலிய மந்திரங்கள்-பதி, பசு, பாசம் முதலிய முப்பொருள் இலக்கணங்கள்-திருநீறு, உருத்திராக்கம் சிவலிங்க வழிபாடு முதலியன பலவும் வற்புறுத்தப் பெற்றுள்ள" என்று, சிவஞான போதப் பேருரையில்,

மாதவச்சிவஞான சுவாமிகள் குறிப்பிட்டருளியிருக்கின்றார். இவற்றினுலெல்லாம் சிவாகமங்களின் சிறப்பும் முதன்மையும் தெள்ளிதின் அறியப் பெறும்.

சிவாலயங்களில், சிவாகமங்களைப் பின்பற்றியே நித்திய நைமித்திக காமிய பூசைக் கிரிகைகள் யாவும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய கிரியைகள் அனைத்தையும் விளக்கிக் கூறும் மூல ஆகமங்கள் 28 எனப்படினும், அவைகளுள் பெரும்பாலானவை இப்போது கிடைப்பதற்கு அரிதாக இருந்துவருகின்றன.

ஆதலால், அவற்றையெல்லாம் மீளவும் ஆராய்ந்து தொகுத்து வெளியிடுவதற்குத், தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், பெரிதும் முயன்று தொண்டாற்றி வருகின்றது. அம்முயற்சியின் விளைவாக, பெரும்பாலான சிவாலயங்கள் பின்பற்றி வருகின்ற காமிகம் என்னும் ஆகமம், முதற்கண் இப்போது சிறந்த முறையில் ஆராய்ந்து தொகுத்துப் பதிப்பிட்டு வெளியிடப் பெறுகின்றது. இந்நூல் வெளியீட்டிற்குத் தென்னிந்திய அர்ச்சகர் சங்கமும், அச்சங்கத்தின் பொதுக் காரியதரிசியான சிவஸ்ரீ சி. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியும், உழைப்பும் அளவிடற்பாலான அல்ல. இம்முயற்சியையும் உழைப்பையும், எவ்வளவு போற்றிப் பாராட்டினுலும் தகும்! காமிக ஆகமத்தின் முதற்பகுதியாக கிரியாபாதப் பூர்வபாகம், தமிழ்ச்சந்த்ரிகையுடன், இன்று (6—2—77) வெளியிடப் பெறுகின்றது. முன்னர் வெளிவந்திருந்த பதிப்புக்களை அடிப்படையாகக் கொண்டும், திருவாவடுதுறை ஆகமப் பிரவீண சிவஸ்ரீ க. சுவாமிநாத சிவசாரியார் அவர்களைக் கொண்டு பரிசோதித்தும், இந்நூல் மிகவும் சிறந்த முறையில் வெளியிடப் பெற்றிருக்கின்றது.

இச்சிறந்த நூலைச் சிவாசாரியப் பெருமக்களும், சிவாலயங்களும் வாங்கி ஆதரித்துப் போற்றிப் பரப்பி. இதன் மூலம் மேலும் பல ஆகமங்கள் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டுமென்று அனைவரையும் வேண்டிக்கொள்கின்றேன். இச்சிறந்த தொண்டிற்கு இயன்ற எல்லாவகையான உதவிகளையும், நமது இந்து சமய அறநிலையத்துறை செய்து உதவும் என்றும், தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தென்னிந்திய அர்ச்சகர் சங்கம் மேன்மேல் வளர்ந்து சிறந்தோங்குக! அதன் மூலம் சிவாகம நூல்கள் மேன்மேலும் சிறந்த முறையில் வெளிவருக! என எல்லாம் வல்ல திருவருளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

சென்னை-600 034
6—2—1977

எம். கே. பாலசுப்பிரமணியம்

உ

சிவமயம்

ஸ்ரீமத் காமிகாகம கிரியாபாத

பொருள் அடக்கம்.

(பூர்வபாக முதற்பகுதி)

படல எண்	பெயர்	பக்கம்
க-வது	தந்த்ராவதாரப் படலம்	3
	ஆகமோற்பத்தி, அவற்றைக் கொண்டு நடத்தும் அதிகாரிகள், அவற்றிற்கு அங்கமாயுள்ள மற்றவை.	
உ-	மந்த்ராவதார படலம்	௫௫
	,, சந்த்ரிகை.	௬0
	மந்த்ரோத்பத்தி, சிந்தாமணி மந்த்ரம், காலாந்தக மந்த்ரம், ருத்ரமந்த்ர சக்கரம், மாத்ருகா மந்த்ரம், மாலா மந்த்ரம், மேரா மந்த்ரம், மந்த்ரமுச்சரிப்போர் வயது முதலியன, அவற்றின் பயன், மந்த்ரங்களில் பும் ஸ்திரீ நபும்ஸக பேதம், இவைகளைப் பிரயோகிக்க வேண்டிய கிரியைகள், ஸ்வஸ்திக முதலிய சக்ரபேதம். சித்தாரி கோடி விபரம், மந்த்ரோபதேச ஜபங்களது முறைமை, மந்த்ர ஜெபசங்க்யை இவற்றிற்கு கால முதலிய அளவும் பயனும்.	
௩-	ஸ்நாநவிதி படலம்	௬௭
	,, சந்த்ரிகை.	௮௧
	மலஜலவிசர்ஜனம், சௌசம், தந்தசுத்தி, ஸ்நாநவிதி, பஸ்மபேதம், சந்தியாவந்தனம், சுத்தி, பஸ்ம ஸ்நானம், திரிபுண்டரதாரண விபரம், ஆசமன சாதக பாத்ரம், வஸ்திரதாரணம், அரைநாண், யஞ்ஞோபவீதம் செய்வகை, உத்தரீயம், ஸ்நானகாலம், ஆசமனம், மார்ஜனம் அதன் பலன், ஆசமன பலன், காலம், ஆர்க்ய தீர்த்தம், சந்தியாவந்தனம், புரோக்ஷணம், தர்ப்பணம்.	

படல எண்.	பெயர்	பக்கம்
௪-	அர்ச்சனுவிதி படலம்	௯௭
	,, சந்த்ரிகை	௧௪௧

ஆன்மார்த்த பரார்த்த விபரம், பரார்த்த பூஜா பலன், சிவத்விஜரல்லாதார் பரார்த்த பூஜை செய்வதாற் பீடை, சிவத்விஜர்களின் பரார்த்த பூஜா விசேஷம், சிவலிங்க பூஜா பலாபலன், திரிவித விக்ன நிவாரணம், சிவலிங்க திருஷ்டி விசேஷம், பிராகார விசேஷம், பூஜாமண்டப ப்ரவேசம், கலசஸ்தாபனம், பஞ்சசுத்தி, ஆசநம், அம்ருதீகரணம், கரந்யாசவிபரம், அங்கந்யாசம் கரந்யாச விசேஷம், சிவத்யானம், ஆன்மசுத்தி கலாசோதனே, தாரணே தரிக்க, ப்ராணுயாமம், பிராசாதமந்த்ர த்யானம், மாலாமந்த்ர த்யானம், அக்ஷர ந்யாசம், ஷடங்க கீலக தத்வ நியாசம், பூஜை ஹோம சமாதி, பூதசுத்தி, திரவியசுத்தி, பாத்யபாத்ரஜலம், ஆசமன பாத்ர ஜலம், அர்க்ய பாத்ரஜலம், அர்க்கியஜல ப்ரோக்ஷண விபரம், மந்த்ரசுத்தி, பஞ்சகவ்வியம், ஸ்நபனம், நித்தியம், நைமித்திகம், இலிங்கசுத்தி, ஆசனம், லிங்க பீடம் சதாசிவத்யானம், ஆவாஹனம்,பூஜையில் அதமா அதமம், அதமத்தில் மத்திமம், அதமம், மத்திமத்தில் அதமம், மத்திமத்தில் மத்திமம், மத்திமம், உத்தமத்தில் அதமம், உத்தமத்தில் மத்திமம், உத்தமத்தில் உத்தமம், அபிஷேக விதி, அலங்கார நைவேத்யம், உபசாரம், ஆவரண பூஜை, இரண்டாவது ஆவரணம், மூன்ருவது ஆவரணம், நான்காவது ஆவரணம், ஐந்தாம் ஆவரணம், நைவேத்தியம், பலி ஹோம தாம்பூலம், உபசாரம், பவித்திரம், ப்ராசாத மந்திரொச்சாரணம், ஜபம், பிரார்த்தனே, நித்திய ஹோமம், நித்யோத்ஸவம், தியானம், சல ஸ்திர லிங்க விசர்ஜனம், சண்டேச பூஜை, நிர்மால்யம், நிர்மால்ய பாத பிராயச்சித்தம்.

படல எண்.	பெயர்	பக்கம்
௫-	அர்ச்சனாங்கவிதி படலம்	௪௮௮
	,, சந்த்ரிகை	௧௯௭

சந்த்யாகால பூஜை, அபிஷேகத்திற்கு ஜலம் முதலியவை, வஸ்திரம், பாத்ய ஜலம், ஆசமன ஜலம், அர்க்ய ஜலம், சந்தனக் கலவை, புஷ்பவிதி, தூபம், தீபம், நைவேத்ய முதலியன, பலன்.

படல எண்.	பெயர்	பக்கம்
௬-	நைவெத்யவிதி படலம்	௨௦௫
	,, சந்த்ரிகை.	௨௧௩

நைவேத்ய விபரம், நைவேத்ய பலன், நைவேத்ய தான்யம், தான்ய சுத்தி, நைவேத்ய விசேஷம், நைவேத்ய ப்ரமாணம், திரிவித பாத்ரம், நைவேத்ய பாகம், பாயசம், சர்க்கரைப் பொங்கல், எள்ளோரை, பருப்புப்பொங்கல், மஞ்சள்ளன்னம், வியஞ்சனம், உப்பு முதலியவற்றின் பிரமாணம். மோர்க்குழம்பு, பச்சடி முதலியவை, நைவேத்யக் கிரியை, நைவேத்ய பாகம், பரிவார தேவதா நைவேத்யம், பலிமந்த்ரம்.

படல எண்.	பெயர்	பக்கம்
௭-	குண்டலக்ஷணவிதி படலம்	௨௨௧
	,, சந்த்ரிகை.	௨௨௫

தேவதா குண்ட லக்ஷணங்கள், யோனி குண்டம், அர்த்த சந்த்ர குண்டம், திரிகோண குண்டம், விருத்த குண்டம், அறுகோண குண்டம், பத்ம குண்டம், எண் கோணகுண்டம், கண்டப்ரமாணம், மேகலேயளவு குண்டநாபியளவு, குண்டத்தின் முகம், மேடை குண்டங்களிருக்க வேண்டு மிடம்.

படல எண்.	பெயர்	பக்கம்
௮-	அக்நிகார்யவிதி படலம்	௨௩௦
	,, சந்த்ரிகை.	௨௪௧

அக்நி பேதம், அக்நி சொருபம், அக்நியினுபயோக பேதம், அக்நி பருவம், அக்நிபேதபலன், வைதிகாக்நி, மிச்ராக்நி விதி, சைவாக்நி விதி, சிவாக்நி விசேஷம், ஜபசங்க்யை, ஹோம திரவ்யங்கள் முதலியன, அக்நி சாந்தி, சண்டேச பூஜை, நிர்மால்ய தோஷா தோஷம், நைவேத்ய உபயோக முதலியனவை.

படல எண்.	பெயர்	பக்கம்
௯-	காலவிதி படலம்	௨௫௩
	,, சந்த்ரிகை.	௨௫௬

காலவிசேஷம், நக்ஷத்திர பலன். வாரபலன், அஸ்தங்க பலன், இராப்பகல் பலன், ராசிப்பலன். உதய பலன், ஸ்தாந பலன், கோசார பலன் முதலியன, வாஸ்து சாந்தி காசும்.

படல எண். பெயர் பக்கம்

க0. நிமித்தபரீக்ஷாவிதி படலம் உருஅ
,, சந்த்ரிகை. உசு0

நிமித்த பரீக்ஷை விபரம், சுபசகுனம், இடப்பாக சகுனம், சிரேஷ்ட சகுனம், அவசகுனம், சோகத்தைக் காட்டும் சகுனம், சகுனத்தை முன்னிட்டுச் செய்ய வேண்டுவது.

கக. பூபரீக்ஷைவிதி படலம் உசுஉ
,, சந்த்ரிகை. உசுஎ

பன்னிரண்டு வாஸ்து பேதம், சைவீபூமி, பிரம்மபூமி, வைஷ்ணவ பூமி, ஐந்திர பூமி, பசு பூமி, பூதபூமி, அசுர பூமி, பைசாச பூமி, ராக்ஷத பூமி, வாயு பூமி, வருண பூமி, ஆக்நேய பூமி. சாதுர்வர்ண பூப் பிரயோஜனம், வாஸ்து பூமியின் இருவகைப் பேதம், ஜாங்கல பூமி லக்ஷணம், அநூபபூமி லக்ஷணம், சாதாரண பூமியின் பலன், வாஸ்து பூமியின் சதுர்விதபேதம், பத்மக லக்ஷணம், பத்ரக லக்ஷணம், பூர்ணக தூம்ரக லக்ஷணம், வாஸ்துவின் உத்தமமாதி சதுர்வித ஜல பேதம், உத்தம லக்ஷணம், மத்திம அதம லக்ஷணம், நித்ய லக்ஷணம், சாதுர்வர்ண பூமி லக்ஷணம், மிகச் சிறந்த பூமி, சுகத்தைத் தரும் பூமி, துக்கத்தைத் தரும் பூமி, ஜாதியாசார பூமி, பூசகுனம், ஜலபுஷ்ப பரீக்ஷை, அங்குர பரீக்ஷை, பிரமாண பலன்.

கஉ. பிரவேசபலி படலம் உஎச
,, சந்த்ரிகை. உஎரு

பலியிடவேண்டு மிடம், பலியிடுங்காலமும் இடுவோர் லக்ஷணமும், பலிக்கிரியை.

கங. பூபரிக்ரஹவிதி படலம் உஎசு
,, சந்த்ரிகை. உஎஅ

பூபரிக்ரஹக் கிரியை, தேவ பூஜா விஷயம், பூ ஜல பரீக்ஷை.

படல எண். பெயர் பக்கம்

கச. பூகர்ஷணவிதி படலம் உஅ0
,, சந்த்ரிகை. உஅங

உழவுமாடுகளின் லக்ஷணம், உழவு கருவி – கலப்பை மரம், கலப்பையினளவு, ஏர்கால், நுகத்தடி, கலப்பைக் கார், உழவு கயிறு, புறநடை, கலப்பையின் பூஜை, உழவு, பயிர் செய்தல், ஆசார்ய சம்பாவனை, அசுப சகுனம், சாந்தி.

கரு. சங்குஸ்தாபனவிதி படலம் உஅஎ
,, சந்த்ரிகை. உகூ0

சங்குஸ்தாபன விடம், பேழை செய்ய, அளவு கோல் செய்யும் மரம், சங்குவின் பிரமாணம், ஆயம், மண்டல வுருவம், சங்கு செய்யும் மரம், சங்குவின் தொகை, சங்குவில் ஊசி நாட்டி பூஜை செய்ய, சங்கு ஸ்தாபனம், பூர்வோத்தராதி நிர்ணயம், தூர்வாஸ்து.

கசு. மாநோபகரணவிதி படலம் உகூச
,, சந்த்ரிகை. உகூஎ

பரமாணு முதலிய அளவை, அதம மத்திம உத்தம நவ பேத அளவை, ஜாணளவு முதலியன, பிராஜாபத்ய அளவு முதலியன அளக்க வேண்டிய விபரம், தண்டக் கயிறு ப்ரமாணமும் அதனளவு விபரமும், கயிறு செய்யும் வகை, அளவுகோல் செய்யும் வகை.

கஎ. பதவிந்யாசவிதி படலம் ங00
,, சந்த்ரிகை. ஙகஉ

பதங்களின் பெயர், சகளம், பேசகம், பீடம், மஹாபீடம், உபபீடம், உக்ரபீடம், ஸ்தண்டிலம், மண்டுகம், பரமீசம் (பரமசாயிகம்), ஆசநம், ஸ்தாநீயம், தேசீயம், உபயசண்டம், பத்ராசநம், பத்மகர்பம், திரியுதம், விருத்தபோகம், கர்ணாஷ்டகம், கணிதபர்தம், சூரிய விலாசம், சுசம்ஹிதம், சுப்ரதிகாந்தம், விசாலம், விப்ர கர்ப்பம், விச்வேசம், விபுலபோகம், விப்ரதிகாந்திகம், விசாலாக்ஷம், விப்ரபுத்தி, விச்வசாரம், ஈச்வரகாந்தம், இந்த்ரகாந்தம், வர்ணபேதம், பதங்களில் மூன்றே

படல எண்.	பெயர்	பக்கம்
	சிறப்புடையது, விருத்தபத விந்யாசம், நியர்சம், வாஸ்துவினுபயோகம், இராசிப் பொருத்தம், நக்ஷத்திர நிலை, வாரநிலை, வாஸ்துவின் பலன், வாஸ்துவின் ஸ்திரீ புருஷ ரூபம்.	
௧௮.	சூத்ரநிர்மாணவிதி படலம்	௩௨௩
	,, சந்த்ரிகை.	௩௨௫
	சூத்ரநிர்மாணம், திரிவித சூத்ரம், அநுவம்ச முதலியவை, தேவாலய முதலிய வியற்பப்படாத பதங்கள்.	
௧௯.	வாஸ்துதேவபலிவிதி படலம்	௩௨௭
	,, சந்த்ரிகை.	௩௩௧
	வாஸ்துபலியின் காலம், பலியிடும் இலஷணம் வாஸ்து தேவர்களின் பலி விபரம், சாதாரண பலி, மத்திம பலி. பிரதிபலி, பலியாசிரியர், வாஸ்து ஹோமஞ் செய்யுமிடம் முதலியன, சமித்து, வாஸ்து நிர்மாணம், ஆசார்ய லக்ஷணம், வாஸ்து பூஜா பலன்.	
௨௦.	கிராமாதிலக்ஷணவிதி படலம்	௩௩௫
	,, சந்த்ரிகை.	௩௩௭
	அக்ரஹாரம் கிராமம் முதலிய விபரம்,	
௨௧.	விஸ்தாராயாம லக்ஷணவிதி படலம்	௩௩௮
	,, சந்த்ரிகை.	௩௩௯
	அகல நிகள அளவு முதலியவை.	
௨௨.	ஆயாதிலக்ஷணவிதி படலம்	௩௪௦
	,, சந்த்ரிகை.	௩௪௧
	ஆயம் வகுக்கும் விபரம், நக்ஷத்ர விபரம், ஆதாய விரய விபரம், வாரமறிய, உத்தமம் அதமம் அறிய.	
௨௩.	நக்ஷத்திரசக்ரவிதி படலம்	௩௪௩
	,, சந்த்ரிகை.	௩௪௫
	நக்ஷத்ர சக்கரவிதி, நீக்கத்தக்கவை.	

படல எண்.	பெயர்	பக்கம்
௨௪.	தண்டிகாதிவிதி படலம்	௩௪௭
	,, சந்த்ரிகை.	௩௫௦
	தண்டிகாதி த்வாதசநாமம், தண்டிகம், ஸ்வஸ்திகம், ப்ரஸ்தரம், ப்ரகீர்ணகம், சம்பத்கரம், பராகம், பத்மகம், ஸ்ரீப்ரதிஷ்டிதம், ஸ்ரீவத்ஸம், வைதிகம், நந்தியாவர்த்தம், கும்பம்.	
௨௫.	வீதித்வாராதிமாநவிதி படலம்	௩௫௩
	,, சந்த்ரிகை.	௩௫௪
	நாபிவீதி, ராஜவீதி, நாராசம், சிறுவழி, வீதியினளவு, நீக்கவேண்டியவை, த்வாரப் பிரமாணம், விசாலப்ரமாணம், சாலாபலன்.	
௨௬.	கிராமாதிதேவதாஸ்தானவிதி படலம்	௩௫௫
	,, சந்த்ரிகை.	௩௫௬
	தேவதாஸ்தாநம், சிவபூஜையோடு கூடின இடமே வாஸ்து என்பது, தேவபூஜா பலன், சிவவிஷ்ணு ஸ்தாபனம், உக்ர சாந்த விபரம், ருத்ரமூர்த்தி பலன், சாந்தமூர்த்தி பலன்.	
௨௭.	த்விஜசங்க்யைவிதி படலம்	௩௬௨
	,, சந்த்ரிகை.	௩௬௩
௨௮.	கிராமாதிவிந்யாசவிதி படலம்	௩௬௪
	,, சந்த்ரிகை	௩௬௬
	கிராம சரீர அங்க உபாங்க விபரம், சூத்திர நியமன முதலியன, சந்துவீதிக ளுபயோகம், கிராமலோப பலன், அசுப ஸ்தானங்கள், திரிமூர்த்தி யம்சஸ்தானங்கள்.	
௨௯.	பிரம்மதேவபதாதிவிதி படலம்	௩௬௮
	,, சந்த்ரிகை.	௩௬௯
	பதபாக விபரம், ஸ்தான விபரம்.	

C

படல எண்.	பெயர்	பக்கம்
௩௦.	கிராமாதி அங்கஸ்தான நிர்ணயவிதி படலம்	௩௭௦
	,, சந்த்ரிகை.	௩௭௨

கிராமாங்கம், ஸ்தான நிர்ணயம், விருக்ஷ விசேஷம்.

௩௧.	கர்ப்பந்யாசவிதி படலம்	௩௭௪
	,, சந்த்ரிகை.	௩௮௨

கர்ப்பநியாச பலன், உத்தமாதி பலன், கர்ப்பந்யாச காலம், பேழை செய்யும் விபரம், பேழை ஸ்தாபிக்கும் விபரம், ஷை அங்குரார்ப்பண முதலியவை, மண்டபம், பேழை ஸ்தாபனக் கிரியா விபரம், பேழை அக்ஷர நியாசம், சிவத்தியானம், மிருத்திகை நியாசம், மூல வர்க்க நியாசம், அதற்குப் புரத்தில் அஷ்டமங்கல மாகும், நவரத்ன நியாசம், தாதுவர்க்க நியாசம், சக்தி தியானம், தான்ய நியாசம், உலோக நியாசம், மூலிகா நியாசம், அஷ்டகந்த நியாசம், ஆயுத நியாசம், பிராம் மண நியாசம், க்ஷத்திரிய நியாசம், வைச்ய நியாசம், சூத்திர நியாசம், பாகசாலா நியாசம், கிரக நியாசம், திரவியப் பிரமாணமும் ஸ்தாபன விசேஷமும், ஹோம கர்மம், கர்ப்ப ஸ்தாபன ஸ்தானங்கள், ஸ்தாபன மந்திரம் பேழை ஸ்தாபன இடப்பிரமாணம் முதலியன, தக்ஷிணை, பேழை ஸ்தாபனம்.

௩௨.	பாலஸ்தாபனவிதி படலம்	௩௯௨
	,, சந்த்ரிகை	௪௦௦

பாலஸ்தாபன பலன். பாலஸ்தாபன இடம், அளவு, அக்ரமண்டப அளவை, பாலலிங்கப் பிரமாணம். லிங்க மியற்றத்தக்க வஸ்துக்கள், பாலஸ்தாபன காலம். அக்ர மண்டப விபரம், பீடலக்ஷணமும் பாலலிங்க பேதமும், பாலஸ்தாபனத்திற்குச் செய்யத்தக்கவை, சிவகும்ப வர்த்தனீகும்ப ஸ்தாபனம், அஷ்ட திக்கு பாலகர் கலச ஸ்தாபனம், சிவகும்ப நியாசம், ஜபசங்க்கியை, அக்நி காரியம், ஆசாரிய தக்ஷிணை, ஸ்தாபன கால முதலியன, அக்நிகாரியம்.

படல எண்.	பெயர்	பக்கம்
௩௩.	கிராமக்கிரக விந்யாசவிதி படலம்	௪௦௯
	,, சந்த்ரிகை.	௪௧௨

கிராமக் கிரஹ விந்யாஸ விபரம், உத்தமமாதி பக்ஷம், பிரவேச விதி, சிலாதி ஸ்தாபனம், தானம், தானத்தில் நீக்க வேண்டுவோர். உத்தமமாதி பிராமணப் பிரவேசமும் வாஸ்து பூஜையும், துன்பத்தைத் தருமிடம், விசேஷ பிரவேச விதி.

௩௪.	வாஸ்துசாந்திவிதி படலம்	௪௧௫
	,, சந்த்ரிகை.	௪௧௮

வாஸ்து சாந்தி பலன், வாஸ்து சாந்தி யியற்றுங்காலம், வாஸ்து சாந்தி கிரியை, வாஸ்து பத விந்யாசம், வாஸ்து ஹோமம், ஆவாஹனம், பலியிடுதலும் தர்பணமும், தக்ஷிணை, சாந்தியிற்ற வேண்டுவன,

௩௫.	சாலாலக்ஷணவிதி படலம்	௪௨௧
	,, சந்த்ரிகை.	௪௩௭

சாலாப்பிரயோஜனம், சாலையின் அளவும் பெயரும், ஆயாதி, வாஸ்து, சாலாங்கம், கடைக்கால் சுவர், ஏகசாலை முதலியன, வாசற்கால் முற்றம் முதலியன, கர்ப்பாதானம், ஸ்தான விபரம், வாசற்கால் வைக்குமிடம். ஜலதாரை, ஸ்தம்பலக்ஷணம் முதலியன, சதுரச் சாலை, சாலை விபரம், ஊர்த்துவ பூமி லக்ஷணம், மூன்றடுக்கு பூமி, நான்கடுக்கு பூமி, ஐந்தடுக்கு பூமி, ஆறடுக்கு பூமி, ஏழடுக்கு பூமி, பத்தடுக்கு பூமி, பதினேரடுக்கு முதலிய பூமி, சாலைகளின் பெயர் முதலியன, கிரக விருத்தி, இராணுவ ஸ்தானம், பிராகாரம், துவாரப் பிரதேச முதலியன, கோபுரம். அத்தப்புரம், முற்றம், அகழ், கிரக ஆரம்பகாலம், வீடு கட்டக்கூடாத இடங்கள், வாசஞ் செய்யக் கூடாத இடங்கள், சயன ஸ்தானம், வாசற்கால், தூலம், தூண், வீட்டின் பாகம், கிரஹசாரம், அடுக்கு நிலை, வாசற்கால், ஜலதாரை, ஆயம், ஸ்தான விபரம்.

—:※:—

|| படலாநுக்ரமணிகா ||

படல ஸங்க்யா	விஷய:	ஶ்லோக ஸங்க்யா	ப்ருஷ்ட ஸங்க்யா
	பூர்வபாகாநுக்ரமணிகா	கரு	
	உத்தரபாகாநுக்ரமணிகா	கஅ	
க	தந்த்ராவதார படல:	கஉசா½	1
உ	மந்த்ராவதார படல:	கஅசா½	ஙங
ங	ஸ்நாநவிதி:	கசாச½	சாஎ
ச	அர்சநாவிதி:	ருஙஅ	கூஎ
ரு	அர்சநாங்கவிதி:	அ0½	கஅஅ
சா	நைவேத்யவிதி:	அஎ½	உ0ரு
எ	குண்டலக்ஷணவிதி:	சங½	உஉக
அ	அக்நிகார்யவிதி:	கஉஎ½	உங0
கூ	ஹோமவிதி:	உங	உருங
க0	நிமித்தபரீக்ஷாவிதி:	கசா½	உருஅ
கக	ஶிஷ்யபரீக்ஷாவிதி:	ருசா	உசாஉ
கஉ	ப்ரவேஶபலிவிதி:	எ	உசாஉ
கங	ஶிஷ்யபரிக்ரஹவிதி:	கஅ½	உஎசா
கச	ஶிஷ்யகர்ஷணவிதி:	ஙக	உஅ0
கரு	ஸம்ஸ்காரஸ்தாபநவிதி:	ஙரு	உஅஎ

படல ஸங்க்யா	விஷய:	ஶ்லோக ஸங்க்யா	ப்ருஷ்ட ஸங்க்யா
கசா	மாநோபகரணவிதி:	ஙஉ½	உகூச
கஎ	பதவிந்யாஸவிதி:	கஉசா½	ங0க
கஅ	ஸூத்ரநிர்மாணவிதி:	உஉ½	ஙஉங
ககூ	வாஸ்துதேவபலிவிதி:	சஎ½	ஙஉஎ
உ0	க்ராமாதிலக்ஷணவிதி:	கஎ	ஙஙரு
உக	விஸ்தாராயாமலக்ஷணவிதி:	எ	ஙஙஅ
உஉ	ஆயாதிலக்ஷணவிதி:	ககூ½	ஙச0
உங	நக்ஷத்ரவர்கவிதி:	உ0½	ஙசங
உச	இஷ்டிகாதிவிதி:	உகூ	ஙசஎ
உரு	வீதிவாராதிமாநவிதி:	கங½	ஙருங
உசா	க்ராமாதிதேவதாஸ்தாநவிதி:	சக½	ஙருரு
உஎ	த்விஜஸங்க்யாவிதி:	அ½	ஙசாஉ
உஅ	க்ராமாதிவிந்யாஸவிதி:	உக½	ஙசாச
உகூ	ப்ரஹ்மதேவபதாதிவிதி:	கூ½	ஙசாஅ
ங0	க்ராமாதேர்ஜந்மஸ்தாநநிர்ணயவிதி:	உஉ	ஙஎ0
ஙக	கர்பந்யாஸவிதி:	க0ச	ஙஎச
ஙஉ	ஶிலாஸ்தாபநவிதி:	கூஎ½	ஙகூஉ
ஙங	க்ராமக்ருஹவிந்யாஸவிதி:	ஙஉ½	ச0கூ
ஙச	வாஸ்துஶாந்திவிதி:	ஙங	சகரு
ஙரு	ஶாலாலக்ஷணவிதி:	ககூங½	சஉக

—(0)—

உ

ஶிவமயம் ॥

ஶ்ரீ உமாமஹேஶ்வராப்யாம் நம: ॥

வந்தே மஹாகணபதிம் மதநாரிஸூநும்
வாமோருஸம்ஸ்தவநிதாபுஜவேஷ்டிதாங்கம் ।
வஜ்ரஶபவஜ்ஜமஹீஷுமஶாஶ்ரிதாநாம்
வாணீபதிப்ரமுகதேவகணாபிவந்த்யம் ॥

ஸாக்ஷாத்ஸதாஶிவபராக் ஸ்வயமேவ ஶம்போ:
[illegible] ய: ।
நாந்ர ஸதாஶிவ இதி ப்ரதிதோ [illegible]
[illegible] நமதிஸௌம்யகுணம் நமாமி ॥

|| காமிகாகமே - பூர்வபாகாநுக்ரமணிகா ||

தந்த்ராவதாரோ மந்த்ராணாமுத்தார: ஸ்நாநமர்ச்சநம் ।
அர்ச்சநாங்கம் ச நைவேத்யவிதி: குண்டஸ்ய லக்ஷணம் ॥
அக்நிகார்யம் காம்யவிதிர்நிமித்தஸ்ய பரீக்ஷணம் ।
பூபரீக்ஷா ப்ரவேஶாயம்பதி க்ராமாதிலக்ஷணம் ॥
ஶங்குஸ்தாபநம் சைவ மாநோபகரணக்ரமம் ।
பதவிந்யாஸபேதஶ்ச ஸூத்ரநிர்மாணலக்ஷணம் ॥
வாஸ்துதேவபலி: பஶ்சாத் க்ராமாதீநாம் ச லக்ஷணம் ।
விஸ்தாராயாம ரூபாதிலக்ஷ்யம் நக்ஷத்ரவக்ரகம் ॥
தண்டகாதிவிதிர்வீதித்வாராதீநாம் ப்ரமாணகம் ।
க்ராமாதிதேவதாஸ்தாநம் த்விஜஸம்பாவிதாநகம் ॥ ௫
விந்யாஸஸ்ய விஶேஷஶ்ச பஹுதேவபதாதி ச ।
க்ராமோபஜீவிநாம் ஸ்தாநம் கர்பந்யாஸஸ்ய லக்ஷணம் ॥
பாலஸ்தாநவிதாநம் ச க்ராமாதிந்யாஸபேதக: ।
வாஸ்துஶாந்திஶ்ச ஶாலாயா விதாநம் ச தத: பரம் ॥
நந்த்யாவர்த்தம் த்ரிஶாலா ச ஸர்வதோபத்ரஸம்ஜ்ஞகம் ।
வர்த்தமாநம் ஸ்வஸ்திகம் ச ருசகாக்யம் தத: பரம் ॥

சதுஶ்ஶாலா பஞ்சஶாலா ஹஸ்திஶாலா ச மாலிகா ।
லாங்கலாக்யம் மௌலிகம் ச மாலிகாவர்த்தகம் பரம் ॥
நாமஶாலாதிபேதம் ச ஹர்ம்யஷட்விதிஸ்ததா ।
ரூத்யஷ்டகோபவீம் ச பாதாநாம் மாநலக்ஷணம் ॥ ௧௦
ப்ராஸாதஸ்ய விதிஶ்சைவ ப்ராஸாதாநாம் ச பூஷணம் ।
கண்டஸ்ய ஶிகரஸ்யாபி ஸ்தூபிகாயாஶ்ச லக்ஷணம் ॥
நாலாதிஸ்தாபநம் பஶ்சாதேகபூம்யாதிலக்ஷணம் ।
மூர்த்தேஷ்டகாவிதாநம் ச [illegible] ॥
ஶிவலிங்கப்ரதிஷ்டா ச ப்ரதிமாநாம் ச லக்ஷணம் ।
ஶூலஸம்ஸ்தாபநம் பஶ்சாத் தேவஸ்தாபநஸம்ஜ்ஞகம் ॥
ப்ரதிமாநாம் ப்ரதிஷ்டா ச விமாநஸ்தாபநம் பரம் ।
லக்ஷணம் மண்டபாநாம் ச ப்ராகாராணாம் ச லக்ஷணம் ॥
ஸ்தாபநம் பரிவாராணாம் பரிவாரார்ச்சநம் ததா ।
வ்ருஷஸ்தாபநம் பாஞ்ச கோபுரஸ்தாபநம் பரம் ॥ ௧௫

சதுஸ்ஸப்ததி ஸங்க்யாதா: படலா: பூர்வகாமிகே ||

—::—

|| காமிகாகமே - உத்தரபாகாநுக்ரமணிகா ||

பஶ்சிமத்வாரபூஜா ச தக்ஷிணத்வாரபூஜநம் ।
அர்ச்சநம் ஸகலாநாம் ச மஹாஸ்நபநலக்ஷணம் ॥
நித்யோத்ஸவவிதி: பஶ்சாந்மஹோத்ஸவவிதி: பரம் ।
நீராஜநக்ரியா பஶ்சாத்ஹோமநீபபூஜநம் பரம் ॥
க்ருதாபிஷேகம் ஶோபாயா ரோஹணம் க்ஷேத்ரபூஜநம் ।
தீபாவலிவிதாநம் ச வ்ருத்தகல்பபூஜநம் ॥
ஶிவராத்ரேர்மஹாபூஜா தமநகார்ச்சநம் ।
வஸந்தேஜ்யா ஶீதகும்பம் ஹவபூஜா பவித்ரகம் ॥
நவநைவேத்யபூஜா ச தீக்ஷா ஸமயஸம்ஜ்ஞிதா ।
ஸாமீபாகவிதிஸ்ஸம்பாய்யோ நிர்வாணஸம்ஸ்க்ருதி: ॥ ௫

[illegible] ௧௦

[illegible] ௧௫

[illegible]

FOREWORD

I am writing this Foreword advisedly in English to attract the attention of modern scholars to the necessity for preserving the heritage of the Agamas as much as the Vedas and to encourage the custodians and interpreters thereof in cherishing and maintaining it. *Vedāgama samraksaṇa* is the duty principally of all professing Hindus. For, both the Vedas and Agamas are *śruti*—they are *apaurshaya* and *nitya*—and they are spoken of as such in the same breath by *Puranas* and later Sastraic literature and great religious teachers from ancient times.

While the Upanishads known as *Vedanta* and the jnanapada of the Agamas known as *Agamanta* (or *Siddhanta*) are well known, the Agama texts themselves were not easily accessible and could not be got yet by Western scholars to the same extent as Vedic texts. Except for the sporadic and much handicapped efforts at the beginning of this century of scholars like L. D. Barnett and R. W. Frazer, the *Saivāgamas* were less fortunate than *Sākta* and *Pāncarātra* texts at the hands of Arthur Avalon and Schroeder. Yet the practical and living religion of the Hindus to whatever denomination they may belong, is governed, as pointed out by Swami Vivekananda, from the Himalayas to Cape Comorin, by the Agamas only.

The vastness of ****Sāivagamas*** (28 mūlāgāmas and 207 upāgamas)—their slokas reckoned traditionally at many lakhs-and the fact that even the extant texts were the close preserve of Sivāchāryas were a deterrant to their publication. However, an attempt was made at the beginning of this century to publish a few atleast of the powerful agamas by Konraimanagaram Shanmugasundara Mudaliar and later by his nephew Alagappa Mudaliar of Madras and this breakthrough was meritorious as it helped the Sivacharyas themselves and others yearning to know about the Agamas. Later, the Saivāgama Paripālana Sangam Pudukkottai printed a few upāgamas and prakaraṇas. Currently the French - Indological Institute, Pondicherry, under the

* Some of them were in Tamil and Prakrit languages.

guidance of Prof. Jean Filliozat is engaged in the stupendou task of collecting and publishing the available Agamas one by one, but the editing is in French. As important and valuable as all these are, the efforts of the SouthIndian Archakar Sangam, to reprint and publish some of the Agamas for the benefit of the Archakars and the public are praiseworthy. The Sangam has already made some progress inspite of heavy odds. It is a pity that although the secular control of temples have been under Government for over 50 years now, the reprinting of the Agamas, even with temple funds, has not been given serious attention to upto this date. The Agamas are encyclopaedic in their contents, covering rituals and philosophy, and are the store-house of temple arts, architecture, music and dance which are of fascinating interest to many.

Many have only vague notions about the Agamas as even books on Indian Philosophy and Religions pay very scant attention to them (except perhaps Dr. S. N. Dasgupta's book *History of Indian Philosophy, Vol. V*). For the information of the ignorant and the biased it has to be explained here that in point of chronology the Agamas are as ancient as the Vedas and they are both acknowledged as Divine Revalation from from the mouth of God. They are both *sabda pramāna* and lead to *avabōdha jnana* (self-luminious knowledge). All theistic religious like Saivism and Vaisnavism (including the Madhva Vaisnavism) respect the Agamas and base their theological doctrines on them. The monistic Advaita relied only on the Upanishads with monistic trends for its metaphysics. The jnanapada of Agamas, are more explicit and indeed *Svetārsvatara* upanished is sometimes called Agamic upanishad. The difference and distinction between the Vedas and the Agamas are that while the Vedas spoke of many Gods and of one Brahman, the Agamas are out and out monotheistic and their ontology is no less profound. *Sankara Samhita* of Skanda Purana speaks of the relation of the Vedas and Agamas thus: Vedas are in the middle of the mouth, the Aksharas are

the teeth and the Agamas are from the very tongue of Siva (" *Aasya madhyē sthitha veda devadevasya bhāsura, aksharām tu dautam jiḫvayam tu Sivjnāna* "). Later Saints like Tirumular in his *Tirumandram* which is considered to be the essence of the Agamas and Manikavachagar and Nammalvar (both Saiva and Vaisnava) and scholiasts like Haradatta, Srikantha, Sivāgrayogin Sivajnānaswami and Appaya Dikshita have looked upon Vedas as common and the Agamas as specific as the latter are for all irrespective of caste and sex that yearn for the descent of the Grace of Siva (*saktinipāda*). The Agamas are synthetic—*mantra*, *tantrā* and *siddahanta*. and embrace *charya*, *kriya*, *yoga* and *jnana pādas*. What is more, they provide for the sacrament of *diksa*, ordinary and special, besides the *gāyatri* for *svārtha* and *parārtha* puja, No one without Agamic *diksa* can perform any puja at home or in the temple. Hence a knowledge of the Agamas is necessary to all alike if they wish to take the sacrament of *diksa* for a divine office or for self - salvation..

The present publication of *Kāmikāgama*, Pūrvabhagā, Part I, by the South Indian Archakar Sangam, Madras (which has within its fold both Saiva and Vaisnava archakas) is to be welcomed and encouraged. This volume gives the Agama text in grantha script together with tātparya (gist) in Tamil for the benefit of all. One patala alone has been transliterated in Tamil but not others. (The Sangam has already published the entire Pūrvabhaga in Devanagari script). The contents of the present volume are briefly given in its preface. The Tantrāvatara patala gives the origin of the Agamas. The Mantrāvatāra patala gives an account of the mantras. The rest of the patalas give a detailed account of the various rituals and their significance.

Kāmikagama is one of the longest Agamas and most of the temples in South India follow it only. It is looked up on as the feet of Siva. It deals with all the rituals from *karṣhaṇa*

(turning the sod) to *pratiṣta* (installation) of deities. The uttarabhāga deals with *dikṣā*, festivals etc. So this is a complete Manual for priests and laymen and for the inquisitive scholar who wants to know the details and symbolism of Agamic worship, private and public. Indeed there is currently a great interest in the information from other religionists and Western scholar. This publication would therefore serve a felt need by the Hindus and non-Hindus and place the Agamas before a world view.

The South Indian Archakar Association is to be congrattulated on this programme of reprinting the Agamas. It deserves State support as well as the support of the professors of the faith, The Secretary of the Sangam, Sivasri C. Swaminatha Gurukkal deserves the thanks of the public for his labours even at his old age, particularly when the present cost of production of books has increased enormously. The only recompense that the Sangam would most need is the quick purchase of this Part so that the remaining Parts could be taken quickly.

I commenced this volume to the attention of all who wish to get an insight into the contents of the Agamas without which Hinduism would not be a living religion and no research on Indian philosophy would be completed.

"Arasadi Karpagam,"
Thyagarayanagar,
Madras-17.
1st Feb. 1977

N. MURUGESA MUDALIAR,
Retd. Secretary to Govt. and
Special Adviser, sometime Patron, Saiva Siddhanta Maha Samajum, etc.

INTRODUCTION

The Saiva Agamas are some of the earliest books in the Sanskrit language on the Saiva religion and philosophy, written over a period of several centuries before the Christian era. The Agamas represent on independent class of writing by very early seers, who had an inward experience and enlightenment from the Supreme Being, and who were also perhaps influenced by the Vedas in their original form. They had realised in their lives and thoughts the general truths taught by the early Upanisads. So far as Saivism is concerned, these seers were not men from the North. They were essentially representatives of All India and they reflected in their thoughts, modes of meditation and worship, and in their writing, the inherent Theism of the South. The Theism of the south or rather, the Saivism of the Tamilians, was the growth of an unbroken tradition probably from the pre-historic past and this had three elements fused into it. These are worship of idols and images, both in the shrines throughout the land and in the devotees' own houses, symbolism, and the inward meditation and realisation. These three were not separate compartments, but basically one harmonious integrated whole. When the Upanisads were added on to the Vedas in the course of the later centuries, they could not but be influenced by the religion and philosophy flourishing around them. These naturally embody a considerable volume of the thought of the agamic scholars, because some of the early Agamas were

earlier than these later Upanisads in point of time, and the Agamas were much more alive and vibrating with life and activity than the Upanisads, because they dealt with definite and concrete objects, while the others dealt only with abstract concepts. The very fact that some later Upanisads came to be written shows that the followers of the original Upanisads had to take note of agamic thoughts and, to bring them also into a single common fold, adopted the device of writing further Upanisads, to embrace fresh thought on the same subject. The Saiva Upanisads such as *Brhadjabala* did certainly come into existence a long time after the Agamas.

The Agamas claim Vedic authority for their doctrines. The agama doctrines are indeed theistic and such theism is not foreign to the Upanisads. The following agamic passages may be seen to affirm the derivation of the Agamas from the Vedas 'The siddhanta consists of the essence of the Veda' (Suprabhedagama) ; 'This tantra is of the essence of the vedas' ; 'This siddhanta knowledge which is the significance of Vedanta is supremely good' (*Makuta*). It has been suggested that the agamic systems were developed out of the Brahmanas in the same way as the Upanisads, though at a much later stage, and that some of the later Upanisads like the *Svetasvatara*, which address the Supreme Being by a sectarian title and not as Param Brahman, as of yore, probably grew up under the shadow of the Agamas. The agamic cult which was that of the generality of the people, and the Vedic cult which was that of the priestly

classes, officiating for themselves or for others, were both indigenous ; they existed and grew up side by side from the earliest times without any extraneous influence ; the distinction between the two was in no sense racial. The Agamas are deemed to have scriptural authority and are often called the Veda and the Fifth Veda. As a matter of fact, although the Sanskrit *Nighantu* names the Veda as the *Nigama* and the Tantra as the *Agama*, the Veda and the Agama both seem to have been denoted by the common term *sruti* up to the XI century, after which period the above distinction of Nigama and Agama seems to have been adopted. The agamic (tantric) texts, as we know them today, had for the most part preceded Buddhism, and only the agamic cult had been able gradually to swallow up Buddhism on the Indian sub-continent, and ultimately to banish it altogether from the Indian soil ; it was not the Upanisadic philosophy but the agamic cult that was responsible for the supplanting of Buddhism and for the fusion of the salient features into the core of the Hindu religion.

Several explanations have been offered for the term *agama*. One is that because it emanated from God, it is called the Agama, that which came (from God). Another is that the three letters *a-ga-ma* respectively denote *pati*, *pasu* and *pasa* (the self, the soul and the bonds) and that the agama deals with all these three entities and their relationship, and hence this name.

A Sanskrit verse gives an interesting meaning for the three syllables *a*, *ga* and *ma* :

Agatam siva vaktrebhyah, gatam ca girija mukhe,
Matam ca siva bhaktanam, agamam cheti katyate.

'The agamas originated from the faces of Siva, fell on the ears of Parasakti and spread in the world as the *mata* of the Siva bhaktas'. The agamas take their name from the first letters of the words *agatam* (originated), *gatam* (fell) and *matam* (religion).

The common noun *agama* simply means coming or acquisition.

But in the Saiva school, a special root meaning is indicated for the term.

It is given as *a*-knowledge, *ga*-liberation and *ma*-removal of the bonds. The agama came to be called as such, since a study and adherence to its codes liberates the soul from bondage, causes realisation of the Supreme, and ultimately confers Eternal Bliss.

Agamas are common to the three prominent schools and they are called Agama in Saivism, Samhita in Vaishnavism and Tantra in Saktaism.

The agamas had not been quite popular in North India for the simple reason that they were all written in palm leaf manuscript in the *grantha* characters which were unknown in the north. Their script was the *nagari*, However, the Sivagama Paripalana Sangham of Devakottai published some Upagamas in the nagari script. The French Institute of Indology in Pondicherry are now publishing a series of agamas in the nagari script. They have so

far published parts of the *Ajtha*, *Raurvava* and *Mrgendra*. Their *Matanga* is to be released soon. They have been able to secure 23 out of the 28 principal agamas.

The agamas have the greatest currency in the Tamil country. The great Prof. S. N. Dassgupta has stated that not a single manuscript of importance is available in Banaras, considered the greatest seat of Sanskrit culture. It therefore goes without saying that the Saivagamas have been a rare and special preserve of the Sivacharyas in Tamilnad. All temple worship, festivals, installation, consecration etc., are here done according to the agamas. The thousands of temples in this country are standing monuments to the prevalence of the agamic cult from the ages past down to the present day.

Each Agama has a number of subsidiary agamas called Upagamas and their number is 207. Among the Upagamas the *Paushkara* and the *Mrgendra* are well known. The principal agamas being with *Kamika* and end with *Vatula*. Each agamas has the four parts or *padas* called *Vidya*, *Kriya*, *Yoga* and *Charya*. The *Vidyapada* is the philosophical part while the *Kriya pada* is the ritualistic part. The other two parts are generally very short. The *Kriyapada* of the *Kamika agama* has been the most wellknown part in Tamilnad. This is one of the largest of the known agamas. It is said to represent the Feet of Siva. Its Kriyapada alone has been printed, in two parts, by the Sivajnanabodha press, in 1901. The total number of verses in it are 12.000, made up as follows : *Purva-*

5166, *Uttara*-6477 ; verses lost 357. The term *Kamika* means 'the object desired'; the term *Kamikagama* is said to signify 'the Book which grants the desired object to the souls and helps them to final release through severance of bonds'. The Kamika is the agama which is widely in use today. Sivacharyas say that its authority derives from the fact that it always prescribes the rules very definitely, saying "this and not that".

The Purva Kamika, the first part was published with a Tamil translation done by Visveswara Sastri of Tiruvottiyur. It has four sections dealing with the revelation of the agamas, rules for daily observance and worship, rules for the construction of temples and houses and for performance of rituals and rules for the installation of the deities.

The *Kamika* published by Shanmugasundara Mudaliar had long been out of print and most of the present generation could never have set its eyes on it. The non-availability of this Kriyapada text was naturally a great handicaps to the earnest *archaka* who wanted really to study the scripture and follow it in the temple's rituals. The South Indian Archakar Association, through its Secretary Shri C. Swaminatha Sivacharya published in February 1976 the Kriyapada text alone in the nagari script. This no doubt made the text available to Sanskrit scholars but the entire bulk of the Sivacharyas could not use it because they knew only the grantha script. Realising this, the association has now brought out a handsome volume of the Kriyapada, part I, in the grantha script with a complete paraphrase in the Tamil language, chapter by chapter, in about 480 pages. The wealth of the information and guidance contained in this part cannot be brought out in a short introduction. Suffice it to say that an *archaka* who has not made every line in this book his own does not know his job. Archakas hereafter do not have any execuse to say that they do not know any ritual connected with Siva worship. The volume is an encyclopaedia which will reward even any Saiva for a careful scrutiny.

In these days of high paper prices and high labour charges Shri Swaminatha Gurukkal has done a great service to the cult of temple worship, and the *archaka* community by publishing this volume It is the duty of the Hindu Religious Endowments Board to see that some copies are in the library of temples and to supply copies also to the Archakas immediate distribution of the book will give the necessary enthusiasm and encouragement to the aged Gurukkal to publish further volumes of agamas.

M. ARUNACHALAM.

உ

குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளிய

"ஞாலம் நின் புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே।"

ப்ராணன்	ஓம் ஹம்	ப்ராணாத்மனே லகுளீசாய	லக்ஷ்யை நம:
லிங்கத்தடி	ஓம் ளம்	லிங்காத்மனே தமோரூபாய	வியாபிந்யை நம:
லிங்கநுனி	ஓம் க்ஷம்	க்ரோதாத்மனே வர்த்தகாய	மாயாயை நம:

இவை மெய்யெழுத்துக்களின் ந்யாசம்.

இவ்வாறு ஹ்ருதயம் முதலான ஸ்தானங்களை யடைந்திருக்கிற வர்ணங்களால் மாத்ருகாவயவங்களைக் கற்பித்தல் வேண்டும்.

ப்ரணவத்தையும் ஹம்ஸம் என்பதை ஆதியிலும் ஃ௦ என்பதை நடுவிலும் ஶ௦ என்பதை அந்தத்திலும் ந்யாசிக்க.

ஷடங்கம்.

ஓ ருஷீச்வரர்களே! மாத்ருகை ஸ்தனம் இரண்டுகண்கள் சிரசு ஹ்ருதயம் முதலாகிய ஜாதிகளோடு கூடினது. இதை ஷடங்கமென்று சொல்லப்படும்.

முதலிற் கூறிய ப்ரணவம் நடுவிற் கூறிய அக்ஷரம் இவைகளைச் சேர்த்துச்சரிக்கத் தக்கது. அல்லாவிடில் தனியே ப்ரணவமாவது அல்லது தனியே அக்ஷரமாவது சேர்க்கவேண்டும். இவைகளின் லோபம் கீலகமென்று நினைக்கப்படுகிறது. சஞ்சரிக்கிற யாதொரு அந்த மந்த்ரதேவதையின் ரூபத்தை யெழுதுவனோ அவன் கீலகத்தைச் சேர்த்தாவது லோபிக்கச் செய்தாவது உச்சரித்தல் வேண்டும். சமஸ்த மந்திரங்களை யுச்சரிப்பதில் அந்த அக்ஷரம் சேர்ப்பதினாலும் யுக்தியினாலும் மற்றிவைகளின் சித்தியின் பொருட்டுக் கீலகத்தை ஜபித்தல் வேண்டும்.

இந்த சமஸ்தமாகிய இருதயம், சிரோ, சிகா, கவச, நேத்ர, அஸ்த்ரம் என்னும் ஆறு மந்திரங்களையும் முறைதவறுமற் கீலக ப்ரயோகத்தினுல் அறிந்து அநுஷ்டித்தல் வேண்டும்.

கீலகம்—நம:, ஸ்வாஹா, வஷட், ஹும், வௌஷட், பட் என்ற ஜாதிகள்.

இவ்வாறறிந்து அக்ஷர ந்யாசத்தைச் செய்து பிறகு தத்வங்க ளொன்பதையும் ந்யாசிக்க.

தத்வ ந்யாசம்.

சந்த்ர பிம்பத்திற்குச் சமமாகிய நாதத்திலும் புருவ மத்தியிலும் தாலுவின் ரந்த்ரத்திலும் கண்டம் இருதயம் நாபி இவ்விடங்களிலும் சாச்வத ஸ்தாநத்திலும் மூலஸ்தாநத்திலும் சாத்திரப்படி கண்டத்தி லுச்சரிக்கப்பட்ட மந்திரத்தையே ந்யாசம் செய்க.

நாபியிலும் ஹ்ருதயத்திலும் நெற்றியிலும் மௌனயோடு கூடிய த்ரியாக்ஷரத்தை ந்யாசம் செய்க.

பிறகு வ்யோம வ்யாபினி மந்திரத்தைச் சிரசுமுதற் காற்பெரு விரல் அளவாய் ந்யாசம் செய்க,

இவ்வாறு திவ்ய தேஹத்தில் மந்த்ர சமூகத்தை யடைந்தவ ணய் முறையாகப் பூஜை ஹோம சமாதிகளுக்கு இடங்களைச் செய்தல் வேண்டும்.

பூஜை ஹோம சமாதி.

பூஜை ஹ்ருதயத்திற் செய்யத் தக்கது. ஹோமம் நாபியிற் செய்யத் தக்கது. சமாதி புருவமத்ய மாகிய லலாடத்திற் செய்யத் தக்கது.

சமாதி எங்கும் வ்யாபகராயும் வரத்தைக் கொடுப்பவராயும் இருக்கிற ஈச்வரனை த்யானித்தல்.

ஈச்வரனை ஆவாகிப்பதற்குத் தகுதியாகிய ஹ்ருதயத்தில் இடத்தைச் செய்தல் வேண்டும்.

இவ்விடத்திற் கூறும் ஏற்பாட்டின் வண்ணம் ஆசநமமைத்தல் வேண்டும்.

சந்தன முதலாகியதால் தேவனை ஆவாஹித்து மாநசமாய்ச் சிவத்தைப் பூஜித்தல் வேண்டும்.

ஸ்வபாவமா யுண்டான நாபிகுண்டத்தில் உயர்ந்த அம்ருதங் களால் ஓமித்து திருப்தி செய்தல் வேண்டும்.

அடக்கப்பட்ட அபானவாயுவின் தொழிலினுல் இயற்கையா யிருக்கிற நெருப்பைச் சோபிக்கச் செய்து சிவஸ்தானமாகிய புருவ மத்தியில் படிகம் போன்ற நிறமுடையதும் மிகுந்த காந்தி யுடையது மான சிவலிங்கத்தை த்யானித்து, அந்த லிங்கத்தில் மனமொருமித்தவ ணய் அதன் மத்தியில் இருக்கிற பரமசிவத்தை த்யானித்து இடை நாடியில் வாயுவைப் பூரித்தல் பூஜையாகும்.

பிங்கல நாடியில் ஞாநாமிருதத்தை ஓமம் செய்தல் வேண்டும். மூலாதாரத்தில் ப்ராணவாயுவை ப்ரவேசிப்பித்து மூலகுண்டலினி யோடு முடிச்சைப் பிகிந்து கும்பித்து தேவநாடியில் பூரித்து கோதண் டத்தில் (புருவமத்தியில்) த்யாநத்தை அப்யாசிக்க.

அவ்வாறன்றி ஆசையான் மிகுந்த மானத யாகத்தைச் செய் வானுகில் சிவதத்வ முதற் பூமி தத்வம் வரையுள்ள தத்வக் கூட்டங் களின் ஸ்வரூபத்தை யுடைய தனது தேகத்தை த்யானித்து அவ் விடத்துள்ள மூன்று பக்ஷங்களையுஞ் செய்தல் வேண்டும். ஆசனம் மூர்த்தி சம்பு வென்னும் மூன்று பக்ஷத்தையும் அவ்வாறே மூன்று பக்ஷத்தின் ஸ்தாநத்தை யடைந்திருக்கிற நான்குவித தத்வ சமூகங் களையும் த்யானித்தல் வேண்டும்.

மிகவும் விஸ்தாரமாகிய இந்தத் தேகத்திற் சிவசத்தியால் பத்மா சநத்தைச் செய்து அஷ்ட வித்தியேசுரர்களையும் சரீரமாகச் செய்து சிவத்தை ஆவாஹனஞ் செய்து கர்ணிகையிற் பஞ்சப்ரஹ்ம அங்கமந் திரங்களாற் சூழப்பட்டவராயும் ப்ரமத கணேசுரர்களாலும் திக்பால கர்களாலும் வஜ்ர மந்திரத்தை முன்பாகவுடைய அஸ்த்ர மந்திரங் களாலும் சூழப்பட்டவராயும் வுள்ள மஹாதேவரைப் பூஜித்தல் வேண்டும்.

இருபத்தேழு அல்லது மூன்று அல்லது ஓராவரணத்தாலாவது சத்தியைத் தவருமற் பூஜித்தல் வேண்டும்.

மானதமா யியற்றிய வீட்டில் மானத கற்பித வவயவங்களால் மானதமாய்ப் பாவித்து பரமசிவத்தைச் சதா பூஜை செய்தல் வேண்டும்.

காருட மந்திரத்தை த்யாநிப்பவ னெவ்வாறு பெரிதாகிய விஷ பீடா நிவாரண பலனை யடைகின்ருனே அவ்வாறே இந்தச் சிவத்தி யான விஷயத்தில் தன்னு விச்சிக்கும் பலனைப் பெறுவான்.

ப்ராணவாயுவின் விருத்தியால் பூஜையைச் செய்வதெவ்வாறே அவ்வாறே முக்யமாகிய ஆவ்ருத்தி தோறும் வாயுவை வெளியிடல் வேண்டும்.

சத்திகளால் பஞ்ச ப்ரம்ம மந்திரங்களையும் சிவாங்கத்தையும் சிவமூர்த்தியையும் மஹேசுரர் சதாசிவர் சிவரென்னு மவரையும் பூஜித்துப் பிறகு ரேசகம் செய்க. அஷ்ட வித்யேசுரர், ப்ரமத கணேசுரர், லோகபாலகர், அஸ்திர தேவர்கள் ஆவரணங்களிலும் பிறகு ருத்ராவரணங்களிலும் ரேசகம் செய்க. மறுபடியும் ஆவரணத்தைப் பூஜித்தல் வேண்டும்.

இடை பிங்கலை நாடிகளின் முகத்தால் வீண் சிரம முண்டாகும். சூரிய சந்திர நாடிகள் கெடின் பூஜையானது இஷ்ட சித்தியைத் தரும்.

சுஷும்னை நாடியின் நடுவே யடைந்திருக்கிற ப்ராணனிடத்தில் சமஸ்த தேவர்களையும் பூஜித்தல் வேண்டும். அவ்வாறன்றி அறுகுணமுள்ள தேகத்தின் பொருட்டாவது, அதன் பிறகு சத்தி சரீரத்தை யுடைத்தாகிய ஆசிரியர் ப்ருதிவீதத்துவ முதலான எட்டு வித புஷ்பங்களாகிய தத்வ சமூகங்களைச் சமர்ப்பித்தல் வேண்டு மென்பது. பூமிதத்வம் – கந்தமாகும், ஜலதத்வம் – அபிஷேகமும் தாகத்திற்குத் தீர்த்தமும் நைவேத்தியமு மாகும், தேயு தத்வம்- தீபங்களின் வரிசை, வாயுதத்வம் – விசிறி முதலாயின, ஆகாயம்-இதிலுற் பவித்த சப்தம் பாட்டு முதலாயின.

இவ்வாறு வேறு தத்வங்களையும் யுக்திக்குத் தக்கபடி நிவேதித்துச் சிவத்தினுற் சொல்லப்பட்டது போல் த்யானிக்கில் த்வந்த்வ ரஹிதனுய் மோக்ஷத்தை அடைகின்ருன்.

இவ்வாறு ஆன்ம சுத்தியைச் செய்து பிறகு ஸ்தான சுத்தியைச் செய்தல் வேண்டும்.

பூசுத்தி.

தாளமுத்திரையைச் செய்து அஸ்த்ர மந்திரத்தால் ப்ராகாரத்தை ஸ்மரித்தல் வேண்டும், அதற்கு வெளியிற் கவசமந்திரத்தினுலேயே தாப்பாளை த்யானித்து அதற்கு வெளியில் விக்கினத்தைப் போக்குவதற்காக அஸ்திர மந்திர சமூகத்தை ந்யாசம் செய்ய வேண்டும்.

திரவிய சுத்தி.

பிறகு ஆகாயத்தின் ஸ்தானத்தை த்யானித்து திரவியங்களின் சுத்தியைச் செய்தல் வேண்டும். அதன் பிறகு அஸ்த்ர மந்திரத்தால் கந்தோதக பாத்திரத்தில் ஜலத்தைப் பூரித்து அந்தத் தீர்த்தத்தால் சுத்திக்காக அஸ்த்ர மந்திரத்தை யுச்சரித்து ப்ரோக்ஷிக்க வேண்டும். அர்க்ய பாத்திரம் சங்கு பாத்ய ஆசமன பாத்திரம் உபயோகமுள்ள

வேறு பாத்திரங்கள் என்பவைகளை அஸ்த்ர மந்திரத்தால் அலம்பல் வேண்டும். அதன் பிறகு இருதய மந்திரத்தால் பார்த்துக் கவசமந்திரத்தால் அவகுண்டனஞ் செய்தல் வேண்டும். பொன், வெள்ளி, செம்பு, நாரிகேளம், சங்கு, முருக்கு தாமரை இலைகளாற் செய்தது, மரப்பாத்திரம். மண்பாத்திரம், வேறு யந்திரம் முதலானவைகளிற் செய்த பாத்திரம் சிவ பூஜையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

பிறகு (சந்தன) தீர்த்த பாத்திரத்தில் அஸ்த்ர மந்திரத்தினுல் ஜலத்தைப் பூரித்துப் பரிசாரகர்களாற் கொண்டுவரப்பட்ட சந்தன புஷ்ப முதலான யாவற்றையும் புண்யாஹவாசநம் செய்து, இருதய மந்திரத்தால் புரோக்ஷித்தல் வேண்டும்.

பாத்யபாத்ர ஜலம்.

பாத்திய பாத்திரத்தை யலம்பி சந்தன வாசனை ஜலத்தினுல் நிறைத்தல் வேண்டும். வெட்டி வேரும் சந்தனமும் பாத்யபாத்திரத்தில் சேர்க்க வேண்டும்.

ஆசமனபாத்ர ஜலம்.

அவ்வாறே ஆசமநத்திற்காக ஆசமன பாத்திரத்தை ஸ்தாபித்தல் வேண்டும். முப்பழம், கற்பூரம், கிள்ளுபத்ரம், கோஷ்டம் ஆசமன பாத்திரத்தில் ஹ்ருதய மந்திரத்தினுலேயே சேர்த்தல் வேண்டும்.

அர்க்யபாத்ர ஜலம்.

பிறகு அர்க்கிய பாத்திரத்தில் வேறு சந்தன தீர்த்தம் ந்யாசம் செய்ய வேண்டும். ஜலம், பால், தர்ப்பை நுனிகள், அரிசி, புஷ்பம், எள்ளு, கோதுமை, (வெண்) கடுகுகளோடு கூட எட்டங்கம் அர்க்கிய பாத்திரத்தில் சேர்க்கவேண்டு மென்று சொல்லப்பட்டது.

விசேஷார்க்கியத்தைச் செய்து அந்த அர்க்கிய பாத்திரத்தில் மந்திர சமூகங்களை ந்யாசஞ் செய்தல் வேண்டும். அம்ருத மந்திரத்தினுல் பரமீகரித்துக் கவச மந்திரத்தினுல் மறைத்துப் பூஜை செய்தல் வேண்டும்.

அர்க்கியஜல ப்ரோக்ஷண விபரம்.

அந்த அர்க்ய ஜலத்தால், கவச மந்திரத்தால் தர்ப்பையோடு சந்தனத்தையும், புஷ்பத்தையும், தூபத்தையும், தீபத்தையும், அர்க்கியத்தையும், நிவேதனத்தையும் புரோக்ஷித்தல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் ஹ்ருதய மந்திரத்தால் ப்ரோக்ஷித்தல் வேண்டும். பூஜைக்காகச் சேர்க்கப்பட்ட த்ரவ்யத்தை வெவ்வேருக மந்திரிக்க வேண்டும்.

ஏலம் வெட்டிவேர் முப்பழங்கள் சூடம் குங்குமப்பூ சந்தனம் அகில் பத்திரங்களும் வாசனையுள்ள புஷ்பங்களும் கூடின ஜலம் கிடைத்தற்குத்தக்கபடி பரமசிவத்தினுடைய அபிஷேக காரியத்தில் விதிக்கப்பட்டது.

இவ்விதியில் ஏழைகளால் முற்கூறிய திரவிய சமூகங்களில் யாதொன்று சேகரிக்கக் கூடியதோ அதனை க்ரஹித்தல் வேண்டும். புஷ்பங்களோடு கூடிய அற்க்ய ஜலத்தை அதன் சுத்திக்காக இருதய மந்திரத்தால் சகல ஸ்நாந கும்பங்களில் நிறைத்தல் வேண்டும்.

அவ்வாறன்றிச் சந்தனம் வஸ்த்ரம் பூஷணம் நைவேத்யம் புஷ்பம் இவைகளை ஹ்ருதயத்தில் பரிசுத்தமா யிருக்கிற அந்த ஸ்வ பாவமுடைய அங்க மந்திரங்களாலும் ஸத்யோஜாத வாமதேவ அகோர தற்புருஷ ஈசான மந்திரங்களாலும் அபிமந்திரித்து மிகுந் திருப்பதை த்ரவ்ய சுத்திக்காகக் காயத்திரியால் மந்திரித்தல் வேண்டும்.

பால் தயிர் நெய் தேன் சர்க்கரை சந்தனஜலம் இவைகளை ஸ்நாநத்திற்காக இருதய மந்திர முதலானவைகளாலாவது மந்திரித் தல் வேண்டும்.

சோதிக்கப்பட்டதாயும் மந்திரிக்கப்பட்டதாயு மிருக்கிற திரவி யங்களை முறையாக சந்தன முதலானவைகளாற் பூஜித்து அம்ருத மென்னும் பெயருள்ள முத்திரையால் அம்ருதீகரித்துப் பாவித்தல் வேண்டும்.

கிரமப்படி இவ்வாருகிய த்ரவ்யங்களால் ஆன்மாவைப் பூஜித் தல் வேண்டும் சந்தனப் பொட்டிட்டுச் சிரசிற் புஷ்பத்தை வைத்தல் வேண்டும்.

மந்த்ர சுத்தி.

இஷ்டமாக மௌனத்தைக் கிரஹித்து அதன்பிறகு மந்திரங் களைச் சோதித்தல் வேண்டும். மந்திரங்கட்டு மாலை முதலாகிய ஐச் வர்ய சமூகங்கள் சொல்லப்பட்டன. அம் மாலை முதலிய மந்திர ஜாலங்களை யெழுப்புவதாகிய சிவாஞ்ஞா சத்தியானது ஓம் நம: என்று ஸ்மரிக்கப் பட்டது. ஓங்கார முதல் நமோந்தமாக விருக்கிற மந்திரங்களை முழுமைக்கும் படித்தல் வேண்டும். புஷ்பாஞ்சலி செய்து சிவாபிப்பிராயமாகப் பாவிக்கப்பட்டவராயும் மும்மாத்திரை முதலிய க்ரமத்தினுலேயே எவ்வளவு பர்யந்தம் நாதத்தின் முடிவை யடைவானே அதுவரைப் படித்தல் வேண்டும்.

இவ்வாறு சுத்தமாகிய தத்துவத்தைச் சேவிப்பதால் மந்திர சுத்தி ஆகும்.

பஞ்ச கவ்வியம்.

பிறகு பஞ்சகவ்வியத்தைச் சேர்க்க வேண்டும். இந்தப் பிர கரணத்தில் அதன் செய்கை சொல்லப்படுகிறது. (சொல்லப்படுகிற தென்பதனல் இதனை உத்தர காமிகத்துட் கூறியிருப்பதனைச் சந்தர் பாநு கூலமாக யிவ்விடம் கூறப்படுகிற தென்பது கருத்து. இப்படலம் 125-வது ஸ்லோக முதல் 267-வது ஸ்லோகம் வரை வருவித் துரைத்திருப்பதைக் கண்டு கொள்க.)

மண்டபத்தின் மங்களகரமாகிய விடத்தில் ஒன்பதரையாகச் செய்யப்பட்ட க்ஷேத்திரத்தில் ஐந்து பாத்திரங்களை ஐந்து தத்துவங் களாற் செய்யப்பட்ட ந்யாசத்தில் வைத்தல் வேண்டும். ஆசாரியர் புருஷகாலத்தில் சாதாக்ய தத்வத்திலிருக்கிற சிவத்தில் நன்ருக ஸ்தாபிக்கப்பட்டதாயும் மிகவுங் குளிர்ச்சியாயும் நல்ல நிற முள்ளதா யும் அமிருத ஸ்வரூபமாயு மிருக்கிற கும்ப ரத்நோதகத்தைச் சங்கற் பித்துப் பால் தயிர் நெய் பசுவின் சாணம் கோமூத்திரம் வைத்தல் வேண்டும்.

பிறகு ஸ்தாபித்தல் - ஈசாநாதி மந்திரங்களால் ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்துமுறை மந்திரிக்கப்பட்டதாயு மிருக்கிற தருப்பை ஜலத்தை ஆறுமுறை அம்ருதீகரித்துப் பூஜித்துச் சிவமந்திரத்தால் அவ்வாறையும் ஒன்ருகச் சேர்த்தல் வேண்டும்.

பால் தயிர் நெய் தேன் சர்க்கரை சந்தனதீர்த்தமாகியவற் றைப் பரிசுத்தகரமான இருதய முதலான மந்திரங்களால் ஸ்நாநத்திற் காக அபிமந்திரித்தல் வேண்டும்.

கூறிப்போந்த பஞ்சகவ்யத்தை நித்யமாயாவது, விசேஷ காலத்திலாவது இஷ்டசித்தியைக் குறிக்குங் காலத்திலாவது சிவபிரா னுக்கு அபிஷேகஞ் செய்வித்தல் வேண்டும்.

ஸ்நபநம்.

இனி விதிப்படி ஸ்நபந கலசஞ் செய்யத்தக்கது. அதுவு மனேகவிதமாகும். அஸ்த்திர மந்திரத்தாற் பூமியைச் சோதித்தல் வேண்டும். வாமதேவத்தால் மெழுகுதல் வேண்டும். அகோரத் தால் எப்படித் தாலப்ரமாணமோ அப்படி சூத்திர ந்யாசஞ் செய்யத் தக்கது. மூன்று தாலப் பிரமாணம் கர்ணிகையளவு எவற்றினும் சாதாரணமாகச் சொல்லப்பட்டது.

எப்பொழுது திக்கில் நான்கிதழை யுடைத்தாயிருக்கிற ஐந்து கலசங்களை ஸ்தாபிப்பதுண்டாகுமோ அப்பொழுது நான்கு பக்கத்

தினு மொன்ருகச் சூழப்பட்ட விதிக்குகளிலும் ஒன்பது கலச ஸ்தானங்கள் உண்டாகும்.

ஓ அந்தணர்களே! பிறகு இருபத்தைந்து கணக்குள்ளது. அதற்கு நான்கு பக்கத்திலும் சூழப்பட்டது நாற்பத்தொன்பது. பின் நூற்றெட்டு.

இருபத்தைந்து கணக்குள்ளதாய் மத்யபாகத்திலிருக்கிற கலசங்களை விட்டு நான்கு பக்கத்திலும் இரண்டு மார்க்கத்தோடாவது, ஓர் மார்க்கத்தோடாவது கூடியிருத்தல் வேண்டும். வெளியிலிரண்டாவரண மிருத்தல் வேண்டும். எட்டு த்வாரங்களோடு கூடினதாயு மிருத்தல் வேண்டும். மத்தியிலிருக்கிற கலசங்கள் பதினைந்து சங்க்யை யுள்ளதாகவும், விதிக்கில் ஸ்தாபிக்கப்பட்ட கலசங்கள் ஒன்பதாகவும் இருத்தல் வேண்டும். பதினைந்து சங்க்யையுள்ள மத்யபாகத்தில் அதன் மத்தியிலிருக்கிற மூன்றையும் விடல் வேண்டும். இது நூற்றெட்டின் விவரமல்லவா! ஆயிரமாயின் ஒன்பததிகமாகும்.

ஒன்றரை முழமகலமாவது அவ்வாறன்றி ஒரு அஸ்தப் பிரமாணமுள்ளதாயாவது இருக்கிற இரண்டு நூல் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் சுற்றல் வேண்டும். வெளியிற் சுற்றினுல் பதினன்கு கணக்கிடப்பட்ட ஆவரணம் இருத்தல் வேண்டும். மார்க்கத்துக் குள்ளிருப்பதை ஆவாகனம் செய்யச் சாத்திரத்தி லேற்பாடானது சொல்லப்பட்டது. நடுவிலிருக்கிற வ்யூகத்திற்கு நான்கு பக்கத்திலும் நான்கு குண்டமாவது, எட்டு குண்டமாவது, நாற்பது வ்யூகத்திற்கு வேருக இருபத்தைந்து குண்டமாவது ஆகும்.

ஆசாரியர் ஆயிரத்தெட்டுக் கலசங்களைப் பார்க்கினும் வெளியிலிருக்கிற ஆவரணத்தை விடவேண்டும். அந்தக் கலச ஸ்தாநங்களில் ஆக்நேய முதலான மூலைகளிலிருக்கிற நான்கு வ்யூகத்தைச் செய்யவேண்டும். மற்றவை யாவும் முன்கூறியதற்குச் சமமாகும். பிறகு ஐம்பது நூற்றெட்டு ஆகும். எட்டு சங்கியையோடு கூடினதாயும் மத்திம பக்ஷமாயு மிருக்கிற இருநூறு கலசங்களில் எட்டு குண்டமாகும். ஆவரணத்திற்கு வெளியில் பதினறு கணக்கிடப்பட்ட கலசங்களைக் திக்கு விதிக்குகளை யடைந்திருக்கும்படி கிரஹித்தல் வேண்டும். அவ்வாருயின் அவ்வெட்டு வ்யூகமானது முற்கூறிய சங்கியையோடு கூடினதாகும்.

தற்புருஷ மந்திரத்தால் நாலுபடியளவு ஜலம் மேடையானது பூரிக்க வேண்டும். அதன் பிறகு அதற் கிரட்டிப்பா யாரம்பித்து ஒன்றை விருத்தி செய்து பத்து பங்கு வரையிலும் சிவகும்பத்தில் அளவாகும். கலசத்தில் நிறைப்பதில் நான்கு மூன்று இரண்டு

ஒன்று சங்க்யைகள் செய்யப்பட்ட படியளவு சம்மதிக்கப்பட்டதாக ஆகும்.

கலசத்தில் மூன்று இரண்டு ஒரு சூத்திரங்களால் முறையாகச் சுற்றல் வேண்டும்.

லவங்கம் பச்சை கற்பூரம் ஆலம்பழப் விலாமிச்சை வேர் இந்த ஜாதிகளோடு கூடின சிவதீர்த்தம் சிவமந்திரத்தினுல் மத்திரிக்கப்பட்டதாக ஆகவேண்டும். அந்தச் சிவ தீர்த்தத்தாலேயே கும்பத்தையும் அம்மன் கலசங்களையும் நிறைத்தல் வேண்டும். பிறகு மும்முதலாகவும் முப்பத்தாறு தத்துவங்களின் முடிவாகவும் இருக்கிற தர்ப்ப கூர்ச்சங்களை ஈசான மந்திரத்தால் த்ரவ்யமூலமாக விந்யாசம் செய்தல் வேண்டும். சிவகும்ப சத்திகும்பங்க ளிரண்டையும் வஸ்திரத்தினுற் சுற்றி சிவகலச சத்திகலசத்தில் நவரத்ன பஞ்சரத்னமிவற்றை விந்யாசம் செய்தல் வேண்டும்.

நான்கு திக்குகளிலும் பாத்ய மாசமனம் அர்க்யம் பஞ்சகவ்யம் இவை இருத்தல் வேண்டும். பிறகு விதிக்குகளில் தர்ப்போதகம் பால் தயிர் நெய் இவைகளிருத்தல் வேண்டும்.

இரண்டாவது ஸ்தாபனம் சொல்லப்பட்டது.

நித்தியம்.

இனி மூன்ருவது சொல்லப்படுகிறது. தேன், பொரி, கேழ்வரகு மா. பொரிமா, மஞ்சள், பூலாக்கீரை, கருப்பங்கிளை, வாழை, எள், வெண்கடுகு, பலாமரத்தின் வேர், தேங்காய், இரண்டு நாவல் கொடி மாதுளை யென்பவைக ளிருத்தல் வேண்டும்.

இருபத்தைந்து கலசத்தி னடுவில் உள்ளாவரணத்தைத் தள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் இவ்விடத்திற் கலசங்கள் பதினுருகும்.

நான்கு திக்குகளிலும் விதிக்குகளிலும் பாத்திய முதலான அஷ்டகமானது சொல்லப்பட்டது. நடுவில் தேன்முதலெட்டு சங்கியை சொல்லப் பட்டது.

முன் சொல்லப்பட்ட இம் மூன்று கலசவிதானம் நித்ய கர்மத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டது. இந் நித்ய கர்மத்தில் இருபத்தைந்து கணக்குள்ள கலசம் ப்ரசம்சை செய்யப் பட்டது. மிகவும் உத்தமமாகிய பூஜைகள் நூற்றெட்டுகலசத்தை முடிவாக வுடையன.

நைமித்திகம்.

நைமித்திகமானது அதற்கு மேற் முன் சொல்லப்பட்டவைகளென்று ப்ரசித்தமாகச் சொல்லப் பட்டது. இந்தச் சமஸ்த திரவியங்களையும் மூலமந்திரத்தினுல் விந்யாசம் செய்தல் வேண்டும்.

முக்கியமான விதைகளை மடக்குகளாலாவது தளிர்களாலாவது மறைத்து இருதய மந்திரத்தால் நானுவிதங்களான வஸ்திரங்களைக் கொடுத்து ஆசமன மந்திரத்தைக் கற்பித்து, இந்தக் கும்பத்தில் மூர்த்தியை ஸ்மரிக்க வேண்டும். பஞ்ச பிரம்ம மந்திரங்களால் சகளீகரித்து, அதன் கலைகளை அவ்விடத்தில் விந்யாசம் செய்தல் வேண்டும்.

குருவானவர் ந்யாசம் செய்யப்பட்ட வித்யாதத்வ சரீரத்தையுடைத்தான அந்த ரூபத்தைத் தியானித்துச் சிவத்தை ந்யாசம் செய்தல் வேண்டும். கலச ஸ்தாபன முதலானதைச் செய்து, இருதய மந்திரத்தால் பாத்ய முதலாகியதைக் கொடுத்து, சந்தன புஷ்பங்களையும் தூப தீப அர்க்கியத்தையும் சமர்ப்பித்து இலிங்க முத்திரையைக் காண்பித்து கவசமந்திரத்தால் அவகுண்டனஞ் செய்தல் வேண்டும்.

ப்ராம்மண ச்ரேஷ்டர்களே! வர்த்தநீ கலசத்தில் கௌரியைப் பூஜித்து யோநி முத்திரையைக் காண்பித்து பஞ்ச பிரம்ம மந்திரங்களை ஈசான மந்திரத்தை விட்டு ஐந்து முறை ஸ்மரித்தல் வேண்டும்.

வெளியில் வித்யேஸ்வரர்கள் ஏற்பாடு செய்யப்பட்டனர். திக்குகளில் ஒன்பது மூர்த்தீசுரர்கள் ஏற்பாடு செய்யப்பட்டனர். இருபத்தைந்து கணக்குள்ள மத்தியில் வாமதேவர் முதலானவர்கள் ஸ்மரிக்கப்பட்டனர். வெளியில் அங்குஷ்டர் முதலான எட்டு கணேசுரர்கள், அவ்வாறே குரோதர் முதலான எண்மர், சதருத்ரர் முதலானவர்கள்.

ஸ்நபந கலச விஷயத்தில் நாற்பத்தொன்பது தேவதைகள் சம்மதிக்கப் பட்டனர். நடுவில் வித்யேசுரர்கள் பூஜிக்கத் தக்கவர்கள் வெளியில் சதருத்ரர்கள் சம்மதிக்கப் பட்டனர். நடுப் பாகத்தில் வித்யேசுரர்களாகிய தேவர்கள் பூஜிக்கத் தக்கவர்கள். அதற்கப்பால் சிவமேயல்லவா! அவரும் ஸஹஸ்ர நாமங்களால் அதனினும் விசேஷமாகப் படிக்கப் படுவர்.

ப்ரணவ முன்பாகவும் கூடாக்ஷரத்துடன் கூடினதாகவும் நான்காவது வேற்றுமையை யடைந்த ஸ்வாஹா நம: என்னும் அந்தங்களாயுள்ள சிவநாமத்தை மாத்திரம் படித்துச் சிவபிரானைப் பூஜித்தல் வேண்டும்.

இலிங்க சுத்தி.

இலிங்க சுத்தியானது எவவாறு சாத்திரம் விதிக்கப்படுகிறதோ அவ்வாறே முறையாக அடையப்படுகிறது.

சிவலிங்க வியக்தம், அவ்யக்தம் வியக்தா வியக்தம் என மூவிதமாகச்சொல்லப்பட்டது. ஸ்வயம்பு, தேவம், பாணம், ஆருஷம், மானுஷம் என அநேக விதங்களாக இலிங்கங்கள் சொல்லப்படுகின்றன. ஸ்திரம் சரம் மூவித மண்டல லிங்கங்களாவது, சித்ர படம் சுவரிலெழுதும் சித்திரம் மந்திர பீடம் அக்நி ஜலம் ஆசாரியர் மர முதலியவும், அவ்வாறன்றி வித்யாதத்வ பீடம் அல்லது பெரும்பாலும் தானே தோற்றிய (சித்தமாக விருக்கிற) சிவலிங்கம் அல்லது ரத்நம் மற்றும் வேறு விதாயகமாய் காரணுகம முதலிய வற்றிற் கூறப்பட்ட விசேஷமாகிய மணல், தண்டுலம், அன்னம், ஆற்றின் மண் பசுவின் சாணம் முதலிய சமஸ்தமும் சிவ பூஜைக்காகப் பூஜாக்ரியை கட்குச் சித்தமானபடி செய்தல் வேண்டும்.

சாமான்ய மாகிய அர்க்யத்தைக் கிரஹித்துக் கொண்டு த்வாரத்திற்கு முன் இடபத்தைப் பூஜித்தல் வேண்டும். த்வாரத்தில் எழுகு லிங்கத்தைப் பூஜித்தல் வேண்டும். பரிவாரத்திற் சிவலிங்கத்தைப் பூஜித்தல் வேண்டும். ஏழு வர்க்கத்தில் நாலாவதாயும் ஏழு ஸ்வரங்களாற் பூஜிக்கப்பட்டதாயும், விந்து நாதங்களோடு கூடினதாயும் முதலிற் ப்ரணவ முன்பாக வ்ருஷபாய நம: என்று அதன் முடிவில் பிரம மந்திர அங்க மந்திரங்களைக் கற்பித்தல் வேண்டும். த்வாரத்தை அஸ்திர மந்திரத்தாற் ப்ரோக்ஷித்து த்வாரபாலகர்களை விக்னேச்வர சரஸ்வதி, நந்தி, கங்கை, யமுனை இவர்களை முறையாகப் பூஜித்தல் வேண்டும்;

கும்பத்திற்கு மேல் கணபதியையும் ஸரஸ்வதியையும் கங்கையோடு கூடின நந்தியையும் மஹாகாளரோடு யமுனையையும் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் பூஜித்தல் வேண்டும்.

விமலரையும் சுபாஹுவையும் மேடைகளில் முறையாகப் பூஜித்தல் வேண்டும்.

இவர்கள் இருதய மந்திர முதலானவைகளாலும் நமோந்தங்களாலும் கிரமப்படி பூஜிக்கத் தக்கவர்கள். அத்திமரத்தால் ஞான வாளை வைத்து உருவம் அவயவத்தின் பிரிவு இவற்றின் பாவனையாலும் சந்தன முதலானவைகளாலும் முறையாக மூவித விக்நங்களைப் போக்கல் வேண்டும். த்வார பூஜையின் முடிவிலும் அபிஷேக முடிவிலும் நைவேத்தியத்திலும் சந்தியின் முடிவிலும் சிறந்ததாகிய திரையிடல் வேண்டும்.

வாஸ்தோஷ்பதே ப்ரம்மணஹ என்று ப்ரம்மாவைப் பூஜித்து முற்காலத்திற் செய்திருக்கப்பட்டதாகிய லிங்கத்தினடுவை யடைந்திருக்கிற பூஜையை, காயத்திரியாற் பூஜித்து சாமாந்யார்க்யத்தைக் கொடுத்தல் வேண்டும். பஞ்சப்ரம்ம மந்திரங்களை யுச்சரித்து இலிங்கத்திலிருந்து பூஜையை நீக்கி இருதய மந்திரத்தினுல் ஈசான்ய

திக்கில் பீடிகை முதலானவைகளால் சாத்திரப்படி சண்டேசாய நம: என்று பிண்டிகையை வைத்து அஸ்திரப் பிரயோகத்தாற் சோதித்து வலதுகையிற் சிவலிங்கத்தை சோதித்தல் வேண்டும். அஸ்திர மந்திரத்தாலேயே சிவலிங்கத்தை வேதிகையுடன் சோதித்துப் பிறகு சாமான்யார்க்ய ஜலத்தால் அபிஷேகஞ் செய்தல் வேண்டும்.

ஆசனம்.

ஆவாஹனத்திற்கு	ஆசனம்	பத்மம்
ஸ்நாநத்திற்கு	,,	அநந்தம்
அர்ச்சநத்தில்	,,	விமலம்
நைவேத்தியத்தில்	,,	யோகம்

என்னும் ஆசனங்களை யறிந்து உபயோகித்தல் வேண்டும். வஸ்திரம் முதலிய வேறு கர்மங்களை சிம்ஹாசனத்திற் செய்தல் வேண்டும்.

இவ்வாறு ஆன்மா இடம் த்ரவ்யம் மந்திரம் லிங்கம் இவைகளின் சுத்தியைச் செய்து பிறகு சிவார்ச்சனம் செய்யத் தக்கது. பஞ்ச சுத்திகளின்றிச் சிவபூஜை செய்வதற்கு விதி விதிக்கப்படவில்லை.

லிங்க பீடம்.

பீடத்திற்கு வாயுதிக்கில் கணேசரைச் சந்தன புஷ்பாதிகளால் பூஜித்தல் வேண்டும். ஈசான்ய திக்கில் குரு பரம்பரையை இருதய மந்திரத்தால் பூஜித்தல் வேண்டும். ஆசனம் ஆசன தேவதை யிவைகளின் சத்தியை யறிந்து பூஜையைத் தொடங்குதல் வேண்டும்.

ஆசனம் ஜீவ தேகபேதம் என இருவகைப்படும், சுத்தவித்யா தத்துவத்தின் முடிவில் அநந்தாதி ஆசனம் சொல்லப்பட்டது. மஹாமாயையின் முடிவில் திவ்யதேகத்தை த்யாநித்தல் வேண்டும். இந்தத் தேகத்தில் இவ்வாறு தேக ஜீவ சிவ மென்னும் மூவித கற்பனையால் ஜீவனே சிவமாகும். யாதொன்று லேசாய் வியாபாரிக்குமோ அது அந்தத் தேகத்திற் கூடியிருப்பதாயும் வியாபாரிக்கப்படு மல்லவா!

பார்க்கப்படுகிற வஸ்துக்கள் வாயுவால் த்ருணம் போல் யாதொரு சத்தியால் தரிக்கப்படுகிறதோ, அன்றியும் உண்டாக்கப்படுகிறதோ சந்திர கிரணம் போல் நிர்மலமாயும், சாந்தமாயும், நான்கு முகங்களையும் நான்கு புஜங்களையும் வுடையதாயும், பால் சமுத்திரத்திற் கொப்பான உருவத்தை யுடையதாயும், கற்பிக்கப் பட்ட இருதய மந்திரத்தை யுடையதாகவும் இருக்கிற அந்த ஆதார சத்தி முன்னமே கூர்மாசனத்தில் ந்யாசம் செய்யத் தக்கது.

நீல வர்ணத்தோடு சமமான வர்ணத்தை யுடையவராயும், அனேக படங்களால் அலங்கரிக்கப் பட்டவராயும், இருதயத்தின்கண் கையைக் கூப்பிக் கொண்டவராயும், ஒரு முகத்தையுடையவராயும், நான்கு புஜத்தினை யுடையவராயும், பால் சமுத்திரத் துண்டான தாமரைப் புஷ்பத்திற்குச் சமமான உருவத்தை யுடையவராயும், ஆசனமந்திர ஸ்வரூபராயுமுள்ள ஆதிசேடரை மந்திர யோகியாகிய ஆசிரியர் இருதய மந்திரத்தால் அவ்வாதாரத்தில் ந்யாசிக்க வேண்டும்.

அவ் வாதிசேடருடைய தேஜோ பூதர்களாயும், க்ஷேமத்தைத் தருபவர்களாயும், சிங்கத்தி னுருவம் போல் வெண்மை யாயும் சூரிய கிரணம் போன்றவர்களாயும், மஞ்சள் கறுப்பு நிறங்களோடு கூடினவர்களாயு மிருக்கிற தர்ம ஞான வைராக்ய ஐச்வரியங்கள் நான்கு மூலைகளி லிருக்கிற நான்கு பாதங்களாவார்கள். அநேக சிம்ஹங்களாற் சூழப்பட்டவைகளாயும், ஒன்றுக் கொன்று பார்த்துக்கொண்டு மிருப்பவைகளுமாகும்.

அதர்மம் அஞ்ஞான அவைராக்ய அநைச்வரிய மென்று ப்ரசித்தங்களாகிய அந்த நானுவர்ண சொரூபத்தையுடைய அவயவங்களைத் திக்குகளில் த்யாநித்தல் வேண்டும்.

கட்டுப்படுதல் விடுதல் என்று மிவைகட்குக் காரணமாயும் சிவப்பு வெண்மையாயும் இச்சாசத்தி கிரியாசத்தியாயு மிருக்கிற இரண்டு சக்திகளையும் மேலே த்யாநித்தல் வேண்டும்,

இலிங்கத்தின் நடுவில், நிருதி முதல் ஈசானதிக்கு வரை மேகலைக்கு மேற் சம்பந்தித்துள்ளதாயும், எட்டிதழோடு கூடினதாயும், அணிமாதி சித்திகளோடு கூடினதாயும், வாமாதி அஷ்ட சத்திகளுக்கு அதிஷ்டானமாகிய தாதுக்களோடு கூடினதாயும், கர்ணிகைகளிலிருக்கிற சத்திகளோடு கூடினதாயும், கர்ணிகைகளி லிருக்கிற சத்திகளோடு கூடினதாயும் தமரச புஷ்பாகிருதி இருதய மந்திரத்தால் வில்வபத்திரங்கால் விசேஷமாக அர்ச்சித்தல் வேண்டும்.

வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரமதனி. சர்வபூததமனி, என்னுமிச்சத்திகளைக் கிழக்கு முதல் ஈசாந்ய திக்குவரை தாதுகளிலும் இதழ்களிலும், மனோன்மனியை கர்ணிகையிலும் இருதய மந்திரத்தால் விந்யசித்தல் வேண்டும்.

வாமை முதலிய சத்திகள் சிவப்பு வர்ணங்களாகும் மனோன் மணி வெண்மை நிறம்.

சூரிய சோமாக்நியின் மும்மண்டலங்களைத் தத்சமுருவங் களோடு இதழ்களின் முடிவாகவுந் தாதுகளின் முடிவாகவும் கர்ணி கையின் முடிவாகவும் த்யாநித்தல் வேண்டும்.

பிரம்ம விஷ்ணு ருத்ரர்கள் மூவரும் மும்மண்டலத்திற்கு மதி தேவர்கள். நான்கு முகமும் நல்லகண்களும் சிவந்த நிறமும் நான்கு கைகளிலும் கமண்டலம் தண்டம் ஜபமாலை தாமரைகளை யுடையவ ராயும் ப்ரஜாபதியாயும் அமாநுஷராயும் சமஸ்த பாபங்களைக் களைகிற வராயு மிருக்கிற ப்ரம்மாவைப் பத்திரங்களில் த்யாநித்தல் வேண்டும்.

காசாம்பூ வர்ணராயும் காந்தியை யுடையவராயும் மஞ்சட் பட்டாடையைத் தரித்தவராயும் பிரகாசிக்கிற கிரீடத்தினாலும் மாணிக்கமய சலங்கைகளின் சமூஹத்தால் அலங்கரிக்கப்பட்டவரா யும் சங்கு சக்கரம் கதை என்பவைகளைத் தரித்தவராயும் துளபமாலை யணிந்தவராயும் வுள்ள மஹாத்மாவாகிய திருமாலை த்யாநித்து இதழ் களில் ஸ்தாபித்தல் வேண்டும்.

சங்கு குருகத்திப்பூ சந்திரன் இவைகள் போன்ற வெண்ணிற முள்ளவராயும் சந்திர சேகரராயும் சிம்ஹத்தின் தோலைத் தரித்தவ ராயும் திரிநேத்ரராயும் காளகண்டராயும் சூலக் கையினராயும் வ்ருஷபாரூடராயும் பெரும்பாம்பு நாசராயுமுள்ள ருத்திரரை த்யானித் துக் கர்ணிகையில் ஸ்தாபித்து அவ்விடத்திலேயே ஆன்மா பரமான்மா ஜீவான்மா இவைகளைத் தியானித்து நியாசஞ் செய்து சத்வ ரஜசு தமசு என்னும் முக்குணங்களையும் காருஹபத்யம் ஆகவ நீயம் தக்ஷிணாக்நி என்னு மூன்றையும் அவ்விடத்திலேயே பிரிவாக விந்யாசம் செய்தல் வேண்டும்.

இவ்வாறு சுத்தவித்யா தத்வம் வரையில் ப்ருதிவி முதலிய தத்வங்களுடைய வ்யாபகத்தைச் சிந்தித்து அந்த தத்துவங்களின் மத்தியில் மறுபடியும் சத்தியைப் விந்யாசம் செய்தல் வேண்டும்.

இவ்வாறு ஆதிசத்தி முதல் அந்திய சத்திவரை பரமசிவத் திற்கு ஆசனம் கூறப்பட்டது. இவ்வாசனத்தில் பீடத்தின் ஸ்வரூப ராகிய ஆதிசேஷர் கர்த்தாவின் ரூபமாகவிருக்கின்றார். ஓ அந்த ணர்களே! இவ்விடத்துச் சுருக்கமாகப் பீடத்தின் ஏற்பாடிவ்வாறு கூறப்படுகின்றது.

ஆசனத்திற்கோ வெனில் தர்ம ஞான வைராக்ய ஐச்வர்யங் களும் ஆதிசேஷன் சத்தி என்பதும் சேர்ந்து ஆறங்கங்களாகும்.

பரமசிவத்திற்கு ஆசனமாவது ஆறுமார்க்கத்தை யுடையது. பூஜையோ வென்றால் இருதய மந்திரத்தால் ஆகவேண்டும். இவ் வாறன்றிப் பீடத்தின் கற்பனை வேறுவிதமாகவும் கூறப்படும்.

சமஸ்த மார்க்கங்களாலும் நிர்மிக்கப்பட்ட பீடமானது தர்ம ஞான வைராக்ய ஐச்வர்ய மென்னும் நான்கு யுகங்களையே நான்கு பாதங்களாக வுடையது. பூமியை கிழங்காகவும் அவ்வாறே கால தத்துவத்தின் அந்தத்திலிருக்கிற தத்துவத்தை ஊர்த்வ நாளமாகவும், ஐம்பது அக்ஷரங்களினுற்பத்தியோடு கூடின ஆவரணங்களாற் பிர காசிக்கப்பட்டதாயும். மாயா தத்வ ஸ்வரூபமாய பெரிய முடிச்சை யுடையதாயும், சுத்த வித்யா பீடத்தையே பெரிய தாமரைப் புஷ்ப மாக வுடையதாயும், எட்டு வித்யேச்வர தளத்தை யுடையதாயும், சக்திகளாகிய கேசரங்களாற் பிரகாசிக்கப்பட்டதாயும, இச்சாசத்தி கிரியாசத்தி யாகிற சிவ சத்தித்வயங்களாலாரம்பிக்கப்பட்டதாயும் கர்ணிகாபீஜத்தினால் பிரகாசிக்கப்பட்டதாயும். மாத்ருகாக்ஷர சம்பவமாயு மிருக்கிற பீடத்தை இவ்விதமாக த்யாநித்தல் வேண்டும்.

தர்ம முதலானவைகளை நபும்ஸகாக்ஷரங்களினாலேயே கற்பித் தல் வேண்டும்.

கற்பத்தை யுணர்ந்த ஆசிரியர் அநந்தாசனத்தைச் சிருஷ்டிக்கு முன்பாகவும், பத்மாசனத்தை யதற்கு முன்பாகவும் கர்ணிகையின் முடிவை ஸப்தஸ்வராந்தத்தினாலும் கற்பிக்க வேண்டும்.

ஓங்காரத்தை ஆதியாகவும் அகாரத்தை முடிவாகவும் விடப் பட்ட நபும்ஸக ஸ்வரங்க ளொன்பதும் வாமா ஜ்யேஷ்டாதி சத்தி களுக்கு க்ரமமாகவும் கிரம மின்மையாகவும் ஒன்பதாகும்.

க காரம் முதல் ஊ காரம் வரை யுள்ள அக்ஷரங்களை இருபத்து நான்கு தாதுக்களாகவும், மகாரம் முதல் ஹகார முடிவாக வுள்ள அக்ஷரங்களை ஒன்பது பீஜங்களாகவும் கற்பித்தல் வேண்டும். அவ் விடத்திலேயே முன்போல் மூன்று மண்டலம் கற்பித்தல் வேண்டும். இவ்வாறு மாத்திருகையினாலுண்டான பீடத்தை யுண்டாக்கிப் பூஜித்தல் வேண்டும்.

சோம சூரியாக்நி மண்டலத்தி லுண்டாகியும், அக்நி ஸ்தம்பத் திற்குச் சமானமாயும், ஈச்வரதத்வம் வரை முடிவாயுமிருக்கிற சரீ ரத்தை (மூர்த்தியை) லிங்கத்தின் நாபியில் விந்யாசஞ் செய்தல் வேண்டும்.

இருதயத்திற்கு சம்புடமாகிய சத்தியோஜாத மந்திரத்தை மூர்த்தி மந்திரமாக உதாஹரிக்கப் படுகிறது. அவ்வாறே இம் மூலமந் திரமே சாதாக்ய மந்திரமெனச் சொல்லப்படுகிறது.

லிங்கத்தின் சிரசில் வித்யா ஸ்வரூபமாசிய சதாசிவ தேவரை ந்யாசஞ் செய்தல் வேண்டும்.

சிவலிங்க ஆரோஹணத்திற் பரிசுத்த ஸ்தான ரூபமாயும் பிரபுவாயும் முப்பத்தெட்டுக் கலைகளோடு கூடினதாயும் பஞ்சபிரம்ம அங்க மந்திரங்களாற் செய்யப்பட்ட சரீரத்தை யுடையதாயும் இருக்கிற சதாசிவனுடைய ஸ்வரூபத்தை த்யான நிமித்தம் இவ்விடத்திற் சொல்லப்படுகிறது. சகல சித்திக்காகப் படமுதலானவற்றி லெழுதப்பட்டதையாவது த்யானஞ் செய்யத் தக்கது.

சதாசிவ த்யானம்.

ஐந்து முகங்களை யுடையவராயும், பத்து புஜதண்டங்களை யுடையவராயும், ஸ்படிகத்தினொளி போன்றவராயும், மூன்று கண்களை யுடையவராயும், சாந்தராயும், சந்திரகலையை சிரஸில் தரித்தவராயும், சர்பத்தினாற் கட்டப்பட்ட சிறந்த ஜடையை யுடையவராயும், மந்திர சிம்ஹாசனத்தில் வீற்றிருப்பவராயும், வெண்டாமரைப் புஷ்பத்தின்மேல் இருப்பவராயும், ஹாரம் அரைஞாண் ஒட்டியாணம் குண்டலம், கடுக்கன், தோள்வளை, கங்கணம், போர்வை வஸ்திரங்களோடு கூடினவராயும், பதினாறு வயதுடையவராயும், அழகுள்ளவராயும், மிகவும் பிரசன்னராயும், புன்சிரிப்புடையராயும்,

வலது பக்கத்தில்,	அவ்வாறே இடதுபக்கத்தில்
சூலம்	அபயஹஸ்தம்
கோடாலி	பாசம்
வாள்	மணி
வஜ்ராயுதம்	சர்ப்பம்
அக்நி	அங்குசம்
இவைகளையும்	இவைகளையும்

உடைய சதாசிவ தேவரை த்யானித்தல் வேண்டும்.

இவ்வாறன்றி வேறுவிதமாக சொல்லப்படுகிறது.

வலது பக்கத்தில்,	அவ்வாறே இடதுபக்கத்தில்
அநுக்கிரகம்	டமருகம்
அபயம்	சர்ப்பம்
தண்டாயுதம்	ஜபமாலை
சத்தி	கருநெய்தல்
சூலம்	மாதுளம்பழம்

இச்சாஞானக்கிரியா சக்திகளென்னுந் திரிநேத்திரங்களோடு கூடினதாயும் த்யானித்தல் வேண்டும்.

சந்திரன் - அவருடைய ஸர்வஞ்ஞத்வ ஸ்வரூபம். பத்துங் கைகள் - பத்துத் திக்குகள். மூவிலைச் சூலம் - முக்குண வடிவம். கோடாலி - சக்தி. வாள் - ஈச்வரருடைய பராக்கிரமம். வஜ்ராயுதம் - பிளக்கப்படாத தன்மை, சங்கார சத்தியாகிய அக்நி - மஹாமாயையின் மேலிருக்கிற பதார்த்தங்களை விளக்குவதும், பாசங்களைப் பஸ்மீகரிப்பதும். கம்பீரவடிவமான சத்தியின் ஸ்வரூபமாகிய நாகம்- யாவும் நியமிப்பது. பாசம் - ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று பாசங்கள். ஓசையின் ஸ்வரூபமாகிய மணி - மந்திர ரூபத்தை அறிவிப்பது. அபயம் - சமஸ்த உலகங்களையும் காப்பாற்றும் சத்தி. அங்குசம் - தனக்கு அடைய வேண்டுவதையும் அடையப் படுவதையும் உணர்த்துவது. இவ்வாறு பருத்த ஸ்வரூபங்களை யுள்ளதாய் ஆயுதங்கள் நினைக்கப்படுகிறது.

ஈசானம் - நடுவில் படிகம் போன்றது. தற்புருஷம் - கிழக்கில் குங்குமம் போன்றது. அகோரம் - தெற்கில் மைபோன்றது. வாமதேவம் - வடக்கில் குங்குமப்பூப்போன்றது. சத்யோஜாதம் - மேற்கில் சந்திரகிரணம் போன்றது.

கிழக்கு சிரசு - சிங்கத்தின் நாதத்தையுடைய முகத்தை யுடையதாயும், நெற்றியில் மங்களகரமான நேத்திரத்தை யுடையதாயும், புருவமில்லாததாயும், உயர்ந்த நாசி அழகிய கண்ணம் சிரித்த வுதடு இவைகளை யுடையது.

தெற்கு சிரசு - பயங்கரமான வுருவம், மேடு பள்ளமான முகம் கடினமான கோரப் பற்கள், திறந்தவாய், பருத்த மூக்கு, உருண்ட கண், நீட்டி உள்வாங்கு நாக்கு. சர்பாபரணம், கபால மாலை, அக்நி ஜ்வாலை போன்ற சடைகளை குரூரமான சர்ப்பங்களாற் கட்டப்பட்ட மேற் குடுமி இவைகளை யுடையது.

மேற்கு சிரசு - மஞ்சள் நிறமானதும், தெளிவானதும், நல்ல நெற்றி த்ரிநேத்திரம் நல்ல மூக்கு க்ரீடதாரணமும் குண்டலத்தாலலங்கரிக்கப்பட்டதும், அழகிய வண்டுகளினுருவம் போன்ற கேசங்களை யுடையதும், பொன்னாபரணங்களை யுடையதும், நெற்றியிற் றிலகத்தோடு கண்ணாடியிற் பிரதிபலிக்கப்பட்ட தேஜஸையும் வுடையது.

வடக்கு சிரசு - முன் நெற்றியிற் சுருண்டு தொங்குகிற கேசமாகிய சிரோபூஷணம் அழகிய சரீரம் இவைகளை யுடையது

மேலிருக்கும் ஈசான சிரசு - மிகவும் பயங்கரமானதும், குண்டலங்களா லலங்கரிக்கப்பட்டதும், த்ரிநேத்திரம் பால சந்திர சேகரம் இவைகளை யுடையது.

இவ்வாறு சதாசிவதேவரின் திருமுகங்களை த்யானித்து அவ்வுருவத்தைப் பூஜித்தல் வேண்டும்.

ஆவாஹனம்.

தேஹத்தில் எவ்வாறோ அவ்வாறே ஈச்வரரிடத்தில் மந்திர ந்யாசத்தைச் செய்தல் வேண்டும்.

இவ்வாறு சத்தி சரீரத்தைக் கற்பித்து அந்தச் சரீரத்தில் மூல காரணமாயும் சிவமாயும் சாச்வதமாயும் சத்யமாயும் சச்சிதாநந்த சுகஸ்வரூபமாயும் சமஸ்த தத்துவங்களுள்ளும் நிறைந்ததாயும் அளவிடப்படாததாயும் உவமான மற்றதாயும் வாச்ய வாசகமற்றதாயும் வாங்மனுதீத கோசரமாயும் மிகவும் நிஷ்களமாயும் உள்ள சிவத்தை சகள ஸ்வரூபத்தில் தெளிவாக த்யானம் செய்தல் வேண்டும்.

இவ்வாறு ஆவாஹனத்தை முன்னே யுடைத்தாகிய மூல மந்த்ரங்களாற் சேர்ப்பதால் விறகை யடைந்த நெருப்பானது எவ்வாறு கடைதல் முதலியவற்ருல் தோற்றுகின்றதோ அவ்வாறு மந்திரங்களின் மகிமையாற் பரமசிவமானவர் பக்தியினுற் ப்ரத்யக்ஷமாய்த் தோற்றுகின்ருர்.

மனமொருமித்த ஆசிரியர் புஷ்பங்களோடு கூடிய அஞ்சலியை இருதயத்தை யடைந்ததாகச் செய்து பக்தியாற் ப்ராசாதமந்திரத்தைப் படித்துக் கொண்டவராய் நிஷ்கள சிவத்தை த்யானித்தல் வேண்டும். தன் சக்திக் கிருப்பிடமாகிய நாதத்திலும் அவ்வாறு பிந்துவிலும் கிரமமாயு மதிக்கிரமமாயும் தன் சத்தி ப்ரகாசங்களால் அதிக்கிரமிக்கப் பட்டதாகக் கற்பித்து ஆவாஹனஞ் செய்தல் வேண்டும்.

ஓ ப்ரபுவே! சர்வஞ்ஞராகிய சிவத்திற்கு ஆவாகித்தலெவ்வண்ணம்? ஆவாகித்தலே ப்ரியமாகுமாகில் ஸர்வவ்யாபகத் தன்மை கெடுகிறது என ருஷிகள் கூற; பரசிவமானவர் கூறுகின்றனர்.

விருக்ஷத்தின் வேர் முதல் முனைவரையிலுள்ள அக்நிக்கு ஸ்பஷ்டமாக வோரிடத்திற் ரேற்றுவதெவ்வாறோ அவ்வாறே வ்யாபருக்கு ஓரிடத்திற் ரேற்றுவது பாதிக்கப்பட மாட்டாது. எவ்வாறு தான் நினைத்தபடி தன் சரீரத்தின் வழியாக கமனம் கமனமின்மை யாகுமோ அவ்வாறே சிவத்தின் இஷ்ட ப்ராப்தியும் மந்திரிப்பவரின் பக்திக்குத் தக்கபடி சரீரத்தின் மார்க்கமா யுண்டாகும். சமஸ்தமும் செய்தவராயும் சமஸ்தமு மடைந்தவராயு முள்ள அச்சிவன் சரீரத்தோடு கூடினவராயினும் கூடாதவராயினும் அளவிடப்படாத சத்தியையுடையவ ராகையால் வ்யாபகராயும வியாபகமில்லாதவராயு மிருக்கிருர். இவ்வாறு விந்துஸ்தானத்தை யடைந்திருக்கிற ஈச்வரரை, கையிற் புஷ்பத்தை யடைந்தவராய் ஸ்மரித்தல் வேண்டும். அந்த த்யானமும் ஜ்யோதி ஸ்வரூபமாகிய ப்ராண நாடியிற் செய்யத்தக்கது. ஆகையால் சிவலிங்கத்தி லிருக்கிற சிவத்தை க்ரஹித்து ஸ்தாபனையால் சரீரத்தில் விந்யாசம் செய்தல் வேண்டும்.

எந்த சாமர்த்தியத்தால் தன்னுடைய சிவத்தைத் தனக்கு யஜமானத்வம் ஆக்குமோ அந்தச் சத்தியின் ப்ரகாச பாவமான சாந்நித்யம் செய்வது அதன் முத்திரையால் செய்யத்தக்கது. சத்தி சாந்நித்யத்தை பரித்யாகஞ் செய்யாவிடில் பூஜை பலமின்றித் தன்கால முற்றும் அபலமே செய்யும். பூஜா நிமித்தம் தடைசெய்வது, சிவபெருமானிடத்தும் நிரோதினி சத்தியின் வல்லபமே வென பாவிக்கப்படுகிறதாகும்.

உலகத்திற் சுகசொரூபமான பொருள் எவ்வாறு காப்பாற்றத்தக்கதோ அவ்வாறே அந்தச் சிவத்திற்கு அவகுண்டன முத்திரையால் அவகுண்டனஞ் செய்யத் தக்கது.

எவ்வண்ணம் அக்நி சூரியர் முதலானவர்கள் தத்தம் காந்திகளால் ஸமர்த்தர்களோ அவ்வண்ணமே சமஸ்தத்தையுஞ் செய்தவரான சிவத்தின் ஸ்வரூபமான அங்கமந்திரங்கள் சாமர்த்திய முடையன; ஆதலால் அவ் வங்க மந்திரங்கள் நீக்கற்பால தன்று.

அச் சிவத்திற்கு இருதய மந்திரம் அஸ்தித்வம், சிரோமந்திரம் மேற் குடிமி, சிகா மந்திரம் ஸ்வாதீனம், கவச மந்திரம், காப்பாற்றுதல், அஸ்த்ர மந்திரம் பாவனையைப் போக்கடிக்கும் சக்தி, நேத்ர மந்திரம் சமஸ்த பொருள்களையும் ப்ரகாசிப்பிக்குஞ் சக்தி.

இவ்வாறு அறுகுணத் தன்மை லோகநாயகராகிய பரசிவத்திற்குச் சொல்லப்பட்டது, இவ்விருதய முதலான ஆறங்கமும் தத்தம் நாம மந்திரத்தால் ப்ரயோகிக்கத் தக்கது.

இருதயம் சிரசு சிகை அங்கம் நேத்திரம் கரத்வயம் இவைகளில் அங்கமந்திரங்களை ந்யாசஞ் செய்க. அங்காங்கிகட்கு வேருகிய ஞானம் அபேத ஞானமாகும்,

சிவபெருமானுக்கு அம்ருத முத்திரையால் அம்ருதீகரித்தல் சொல்லப்பட்டது. அச் சிவபெருமானுக்கு அழகான அங்கத்தை விருத்தி செய்வது உச்சாகமாகும். அன்னம் தனம் இவைகளை, ப்ரயோஜிக்கப்பட்ட மஹா முத்திரையால் செய்தல் வேண்டும். ஆறு அத்வாக்களையே சரீரமாக வுடையவராயும், அநுகூலராயும், சத்தியோடு கூடினவராயும், மிகுந்த ஆனந்தத்தின் சமூகத்தினுல் வெண்

மையாகச் செய்யப்பட்ட திக்குகளை முகத்தை யுடையவராயும் இருக்கிற அந்தச் சிவத்தை த்யானித்து பாதங்களில் பாத்யத்தையும், முகங்களில் ஆசமனத்தையும் கொடுத்தல் வேண்டும்.

பாத்யம் இருதய மந்திரத்தால் நமோந்தமாகவும், ஆசமனம் ஸ்வதாந்வமாகவும், அர்க்யம் ஸ்வாஹாந்தமாகவும் அறுகு புஷ்ப முதலானவை வௌஷட் முடிவாகவும் இருதய மந்திரத்தாலேயே கொடுத்தல் வேண்டும்.

இவ்வாறு உபசாரத்துடன் பத்து சமஸ்காரங்களையும் செய்து பூஜித்தல் வேண்டும்.

ஸ்நாந முதலானதாயும் விபவத்தை யனுசரித்ததாயும் மிகவும் பெரிதாயும் மிகவும் குறைவாயு மிருக்கிற பூஜையின் உபசாரங்கள் நித்ய பூஜாவிதியில் விதிக்கப்படுகிறது. காம்ய விதியில் மாலை முதலான சமஸ்தமும் முக்யமாகும்.

ஸ்நானம் வஸ்த்ரம் சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் அவிசு முகவாச கந்த தாம்பூலம் சங்கீதம் நாட்டியம் பூதங்களுக்கு பலியோடு கூடிய ஓமம் நித்யோத்ஸவம் இவை முதலிய சமஸ்தமும் ஐச்வரிய முள்ளவனுயின் சிவபிரானுக்குச் செய்யத் தக்கது. அற்றேல் கேவலம் பலியாவது செய்யத் தக்கது.

சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் நைவேத்யமாசிய இவை ஐந்தும் பஞ்சோபசாரங்களாகும். தீபம் முடிவிற் செய்யத் தக்கது.

பிரதி பிம்பிக்கப்பட்ட கத்தி கண்ணுடி மணி சித்திர முதலானவை ப்ரோக்ஷிக்கத் தக்கவை. அவையல்லாத ஸ்நானத்திற் குறியவைகட்கு ஸ்நாநஞ் செய்து வைக்கத் தக்கது.

தீபம் வரையிலும் அர்ச்சனமாகவும், நைவேத்தியம் வரையிலும் பூஜையாகவும், பலிவரையிலும் சாந்திகர்மமாகவும் சொல்லப்பட்டது.

பூஜை மூவிதமாகும் - அதமா அதமம்.

உதயமும் சாயுங்காலமும் பூஜித்து அவ்வாறே மத்யாந காலத்தில் பூஜையுடன் இரண்டுபடி அமுது நிவேதனமும் செய்தல் வேண்டும். உதய மத்யானங்களில் ஒவ்வோர் விளக்கும் இராத்திரியில் இரண்டு விளக்கும் மிகவுங் குறைந்ததாய் எண்ணி அநுஷ்டிக்கப்படுவது.

அதமத்தில் மத்திமம்.

உத்ய மத்யானங்களின் அவிசு இரண்டிரண்டுபடி அரிசி யிருத்தல் வேண்டும். உதய சாயந்தரத்திற் பூஜித்தல் வேண்டும். முக்காலங்களிலும் தீபங்கள் நான்கு, சாயங்காலத்தில் அர்க்யத்தோடு பூஜித்தல் வேண்டும்.

அதமம்.

முக்காலங்களிலும் இரண்டிரண்டுபடி அரிசியும், உதய மத்யானங்களில் தீபங்கள் நாலும், சாயரக்ஷையில் தீபங்கள் எட்டு மிருத்தல் வேண்டும். புத்திமான் முக்காலமும் வாத்யத்துடன் பூஜிக்க வேண்டும்.

மத்திமத்தில் அதமம்.

மத்யாநத்தில் எரு மரக்கால் அவிசும், உதய சாயந்தரங்களில் இரண்டுபடி அவிசும் தீபங்கள் பன்னிரண்டும் இருத்தல் வேண்டும், ஓ அந்தணர்களே! முக்காலமும் பலியுடன் புஷ்பாகார லிங்கத்தாற் பூஜித்தல் வேண்டும்.

மத்திமத்தில் மத்திமம்.

முக்காலத்திலும் ஒரு மரக்கால் அரிசியும் நாலாங் காலமாகிய அர்த்தராத்திரியில் அதிற்பாதியாகிய நாலுபடி அரிசியும், தீபம் இருபத்துநாலு மாகும்.

மத்திமம்.

முக்காலமும் பலியோடு கூடினதாயும், பலிக் கிரமத்திற் புஷ்பத்தோடு கூடிய அர்க்யமும், சங்கு காளமென்கிறதோடு கூடிய வாத்யத் தொனியோடு மிருத்தல் வேண்டும். நடுப்பகலில் சிவமந்த்ரத்தோடு கூடிய நித்ய ஹோமமும் அநுஷ்டித்தல் வேண்டும்.

உத்தமத்தில் அதமம்.

முக்காலங்களிலும் இரண்டு மரக்கா லரிசியும், அர்த்த ராத்திரியில் ஒரு மரக்காலரிசியும், எழுபது தீபங்களும் இருத்தல் வேண்டும். முக்காலமும் பலியிடுதலும் ஓமித்தலும் வேண்டும். ஆறு காலமும் சமஸ்த வாத்யங்களோடு கூடினதாகக் கோஷிப்பித்தல் வேண்டும்.

உத்தமத்திற்கு ஆறுகாலமாகும். அதற்குக் கால அளவு இல்லை. எவ்விடத்தில் அதமமோ அவ்விடத்தில் முக்காலங்களிலும் இரண்டு மரக்கால் அரிசியாலேயே அவிசு செய்யத் தக்கது. அர்த்த ராத்திரியில் ஒரு மரக்கால் அரிசி. தீபங்கள் நூற்றெட்டு. முக்காலமும் பலியிடுதலும் ஓமஞ் செய்தலும் வேண்டும். இருபத்து நான்கு வாத்தியம் சமஸ்த வாத்யங்களோடு கூடியதாயிருத்தல் வேண்டும். ரூப யௌவன சம்பத்தை யுடைய உருத்திர கணிகைகள் முப்பத்து நான்கு

அல்லது இருபத்து நான்கு, அல்லது பத்தாவது இருத்தல் வேண்டும். அவ்வக் காலங்களுக் கியைந்த ஐந்தாசிரியர்களோடு கூடிய நிருத்தனத்தை மூன்று காலங்களிலும் அநுஷ்டித்தல் வேண்டும்.

உத்தமத்தில் மத்திமம்.

முக்காலங்களிலும் நான்குபடி அவிசு பாயசமுதலிய பண்டங்கள் இரண்டு மரக்கால் அரிசியால் விதியோடு வெவ்வேருகவும், இரண்டு மரக்கால் சுத்தான்னத்தை வெவ்வேருகவும் சமயல் செய்வித்து நிவேதனஞ் செய்தல் வேண்டும். அர்த்த ஜாமத்திற்கு இரண்டு மரக்காலாகும். தீபங்கள் இருநூறு. முக்காலங்களிலும் பலி ஓமம் தூப தீபம் ஐம்பது உருத்திரகணிகைகளோடு கூடின முப்பத்துநான்கு வாத்யம் இவைகள் சொல்லப்பட்டுள்ளன.

காலமாவது இரண்டு ஜாமமென்று சொல்லப்பட்டது மூன்று சந்திகளிலும் ந்ருத்தனத்தைச் செய்தல் வேண்டும்.

உத்தமத்தில் உத்தமம்.

இனி உத்தமோத்தம பக்ஷத்தை யுத்தேசித்து அவிசின் கிரமம் சொல்லப்படுகிறது. பக்குவஞ் செய்யப்பட்ட பாயசம் முதலான பதார்த்தங்கள் வேருகப் பத்துமரக்கால் செய்தல் வேண்டும். அர்த்த ராத்திரியில் அதிற் பாதியாகும் ஐந்நூறு. மூன்று காலமும் பலி, ஓமம் ஐம்பது வாத்யங்களோறு கூடிய முப்பத்திரண்டு உருத்திரகணிகைகள் நிருத்தனஞ் செய்தல் வேண்டும். இவற்றின் காரியம் ஓர் ஜாம அளவாகும். பாயச முதலிய ஐந்து வர்ண அவிசுகள் முறையாக இரண்டு மரக்கால் அரிசியிலாவது அதிற்பாதியிலாவது செய்தல் வேண்டும். இவைகளுள் ஒன்று இரண்டு மூன்றுவிதமாவது; ஸமஸ்தமுமாவது விசேஷமாகும் அவ்வாறன்றி மறுபடியும் ஒரு காலத்திலாவது அவிசைக் கொடுத்தல் வேண்டும். சுத்தான்னம் இரட்டிப்பாக சொல்லப்பட்டது. இது சாதாரணம்.

இவ்வாறு ஒன்பது விதமாக உத்தமோத்தம முதல் அதமாதமம் ஈருக விதிக்கப்பட்டிருக்கிறது.

அபிஷேக விதி.

சந்தன தீர்த்தத்தின் பரிமள வாசிதமுள்ள ஸ்நாந ஜலகும்பத்தை சம்ஹிதா மந்திரத்திஞல் ஜபித்து, புஷ்பத்தால் அர்ச்சித்து தூபமிட்டு சுபகரமாகப் பூஜிக்க வேண்டும். கையந்திரத்தால் பிழியப்பட்டதாயும் புதிதாகவு மிருக்கிற எண்ணெயாலும், பரிமளமாய்க் காய்ச்சப்பட்ட பசுவின் நெய்யாலும் பீடத்தோடு கூடின சிவலிங்கத்தில் லேபித்துப் பின்பு தூபமிடல் வேண்டும். மங்களகரமான மஞ்சட்

பொடியோடு கூடின நெல் மாவினுலும் உளுந்தமாவினுலும் தேய்த்துப் பிறகு ஸ்நாநஞ் செய்விக்க வேண்டும். இவ்விடத்தில் நெல்லிக்கனி முதலய பரிமள திரவியங்களாலும் தேய்த்து ஸ்நானஞ் செய்விக்க. பசுவின் அம்சமான வஜ்ர முதலான கற்களா லிழைக்கப்பட்ட வர்ணமுள்ள மடக்குகளில் வைக்கம்பட்ட மாவுகளாலும் கடுகு உப்பு சேர்ந்த சிறிது சிவந்த சந்தன வெந்நீராலும் அபிஷேகஞ் செய்க. பால் தயிர் நெய் தேன் சர்க்கரை முதலானவைகளால் தன் சக்தியாநுசாரமாக உழக்கிலிருந்து விருத்தி செய்யப்பட்ட, உழக்கு முதல் மரக்கால் முடிவான ப்ரமாணங்களால் அபிஷேகஞ் செய்க. சர்க்கரையில்லாவிடில் கருப்பஞ்சாறு, தேனில்லாவிடில் நெய்யுமாகும். செல்வமுள்ளவன் இவையாவும் குறைவின்றி ஜல தூப முடிவாக அபிஷேகஞ் செய்யக் கடவன். இளநீர் ருசியுள்ள ரசவர்க்கங்கள் புஷ்ப முதலானவைகளாலும், ஸ்வர்ணத்தோடு கூடிய ஜலம் ரத்னத்தோடு கூடிய ஜலம் சந்தன ஜலம் இவைகளாலும் அபிஷேகஞ் செய்க. சூந்ய சிரசாக அபிஷேகம் செய்யற்க.

சுட்டுவிரல் பெருவிரல் சேர்த்து அஸ்த்ர மந்திரத்தால் சிரசிலிருக்கிற புஷ்பத்தை யெடுத்து அவ்வஸ்த்ர மந்திரத்தாலேயே அப்புஷ்பங்களை யவ்விடம்விட்டு வேறிடத்தில் சேர்த்தல் வேண்டும்.

புஷ்பக் குடலை அர்க்ய பாத்ய ஆசமந ஸ்நாந சோதக ப்ரோக்ஷண பாத்திரங்களேழினும் ஜலம் நிரப்புதல் வேண்டும்.

தூபத்தை அபிஷேக மொவ்வொன்றினும் மற்ற தீப முதலியவைகளை அவ்வற்றிற் குரிய சமயங்களினு மறிந்து உபயோகித்தல் வேண்டும்.

த்வாரபூஜை அபிஷேகம் சந்த்யாகாலம் இவைகளின் முடிவிலும் நிவேதன காலத்திலும் உத்தமமாகிய திரையிடல் வேண்டும். பிறகு ஸ்தாபிக்கப் பட்ட கலசங்களால் அபிஷேகம் செய்தல் வேண்டும். முச்சந்தனம் அஷ்ட புஷ்பம் சப்த தீர்த்தங்களைச் சேர்த்தல் வேண்டும்.

ஆவாஹனம் அர்க்யம் பாத்யம் ஆசமனம் தூபம் சந்தனம் நைவேத்யம் விஸர்க்க மென்னும் எட்டு சமயங்களினும் புஷ்பம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இடது உள்ளங்கையில் தட்டை வைத்துக் கொண்டு சிவலிங்கத்தின் மஸ்தகத்தில் இருக்கும் முன் அர்ச்சித்த புஷ்பத்தை அஸ்த்ர மந்திரத்தால் விசர்ஜனம் செய்து, பரிசுத்தமான கைகளையுடையவனுய் மந்திரத்தோடு கூடிய சங்க முத்திரையால் நனைக்கப்பட்டு அசையாமலிருக்கிற ஜலங்களாற் பரமசிவத்தின் சிரஸில் ஸ்நாநம் செய்வித்தல் வேண்டும்.

கைகளை மேலே சுற்றக் கூடாது. முத்திரைகளை கீழே காட்டக் கூடாது. தளும்பிய ஜலத்தால் திரவியங்களை நனைத்தல் கூடாது.

ஜயசப்தத்தோடு சிவ கும்பத்தையும் சக்தி கலசத்தையும் எடுத்து ஸ்வாமியின் முன் யந்திரிகையின் மேல் வைத்து விந்யாசஞ் செய்தல் வேண்டும்.

சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் அர்க்யம் என்பவைகளைச் சமர்ப்பித்து அந்த விதானங்களை ஆசிரியர் வலது கையினால் வாங்கி சிவ மந்திரத்தை ஸ்மரித்தவராய் புஷ்பத்தோடு கூடின கூர்ச்சத்தை கலசங்களோடு பிடித்துக் கொண்டு தத்வத்தில் மனதை வைத்தவராய்ச் சிவலிங்கத்தின் சிரஸில் மந்திரத்தை ந்யாசம் செய்தல் வேண்டும். பார்வதியை பரமசிவத்திற் கிடது பாகத்தில் ஸ்தாபித்தல் வேண்டும்.

சிவமந்திரத்தை ஸ்மரித்துக்கொண்டு சிவ கும்ப ஜலத்தால் சிவத்தை ஸ்நாநம் செய்வித்தல் வேண்டும். நல்ல பரிமள முள்ள நெல்லிக்கனி முதலானவைகளால் அபிஷேகம் அவ்விடத்திற் செய்வித்தல் வேண்டும்.

பீடத்தோடு கூடின சிவலிங்கத்தைச் சந்தன ஜலத்தால் அபிஷேகத்தைச் செய்து, முகங்களில் ஆசமனத்தைக் கொடுத்து பரிசுத்த வஸ்த்ரத்தால் துடைத்தல் வேண்டும்.

அலங்கார நைவேத்யம்.

வேதிகையோடு கூடின சிவலிங்கத்தைப் பரிமள த்ரவ்யங்களாற் பூசி வெளுப்பான வஸ்திரங்களாலும் அனேகவித த்ரவ்யங்களாலும் மறைத்து அத்தேவரின் பொருட்டு எட்டுவித புஷ்பத்தைக் கொடுத்து பிறகு மந்திரத்தோடு கூடிய அவிசைக் கொடுத்தல் வேண்டும்.

பயற்றம் பருப்புப் பொங்கலாவது சுத்தான்னமாவது வ்யஞ்சன முதலானவைகளோடு கொடுத்தல் வேண்டும்.

பரிசுத்தமான புஷ்பமாலைகளாலும் கிள்ளுபத்திரங்களாலும் பூஜித்தல் வேண்டும்.

பொன்பட்டங்களோடு கூடிய கிரீடங்கள், பொன்னாலாகிய பத்திரங்கள், பொன் அறுகுமுளைகள், லக்ஷ்மியின் வுருவமமைந்த ஸ்வர்ண புஷ்பங்கள், அர்த்த சந்திர வடிவமமைந்த பொன்னாபரணம் அநேக ஸ்வர்ணபுஷ்பம் என்பவைகளால் அலங்கரித்தல் வேண்டும்.

ஆதிவாரத்தில் மாணிக்கமும், சோமவாரத்தில் முத்தும், மங்களவாரத்தில் பவழமும், புதவாரத்தில் மரகதமும், குருவாரத்தில் புஷ்பராகமும், சுக்கிரவாரத்தில் வஜ்ரமும், சனி வாரத்தில் இந்திர நீலமும் இவ்வாறாக சமஸ்தமும் அவ்வவ் வாரங்களுக்குத் தக்கபடி யுபயோகிக்கத் தக்கது. ஆபரணங்களின் விதி இந்தப்படி சம்மதிக்கப் பட்டது.

பிண்டிகையின் ரூபமான தேவியை, சிவத்தியாநம் செய்து கொண்டு ஸ்நாநம் செய்வித்தல்வேண்டும்.

சத்யோஜாத மந்திரத்தால் பாதங்களில் பாத்யத்தையும், சிரோ மந்திர முதலியவற்றால் முகங்களில் ஆசமனமும், முடிவில் சிரசில் அர்க்யத்தையும் கொடுத்தல் வேண்டும்.

பஞ்சகவ்ய முதலான அபிஷேக சமயத்தில் பெருத்த மணியினோசையுடன் உபஸ்தாநத்தோடு கூடினதாயும் தூபத்தை நிவேதிக்க. ஒவ்வொரு த்ரவ்யத்தின் முடிவில் முக்கியமாய் உபஸ்நாநம் தூபத்தோடு கூடினதாயிருத்தல் வேண்டும்.

உபசாரம்.

மந்த்ரகானம் வீணாநாதம் வேதாத்யயநம் சாஸ்திர பாட முதலானவற்றி லொன்றைச் செய்வித்தல் வேண்டும். பிறகு கௌட பாஷை முதலானவைகளால் கானத்தைத் தூபமுடிவு வரையில் அநுஷ்டிக்க வேண்டும். அதற்குமேல் தமிழ் பாஷையினுடைய அங்கமான கானத்தை நிர்த்தனத்தோடு கூடினதாகவும், அநேக ஸ்வரங்களோடு கூடின ஸமஸ்கிருத பாஷா கானம் அல்லது பதினெண் பாஷா கானத்தையாவது செய்தல் வேண்டும்.

அநேக தேசபேத நாட்டியங்களைச் செய்து புஷ்பமாலை முதலானவைகளால் நாலு பக்கத்திலும் தொங்கவிட்டு அலங்கரித்தல் வேண்டும்.

அதன் பிறகு புகையில்லாம லெரிகிற நெருப்பினால் நிறைந்த பாத்திரத்தின் மத்தியில் தூபத்தால் தூபமிடல் வேண்டும். அழகிய ரூபமும் கெம்பீரமான ஓசையுடையதுமான மணியை இடது கையினால் வாத்யம் செய்துகொண்டு எப்பொழுதும் அஸ்திரமந்திரத்தாற் போடப்பட்ட தூபத்தை உயர வெடுத்து காட்டல் வேண்டும்.

காராம் பசுவின் நெய்யினால் நிறைந்ததாயும், கற்பூரம், அகரு இவைகளோடு கூடின வர்த்திகளையுடையதாயும்; அணையாத் தீபங்களை யுடையதாயும்; விருத்தாகார தோரணத்தை முன்பாக வுடையதாயும்; த்ரிசூலாகிருதியாகிய தீபங்களை யுடைத்தாயு மிருக்கிற தீப

மாலைகளாலும்; மற்றும் அநேகவித தீபங்களாலும் நான்கு பக்கத்திலும் ப்ரகாசிப்பித்தல் வேண்டும்.

கோதானம் திலதானம் ஸ்வர்ணதானம் பசுக்கட்குப் புல் முதலான தானம் இவைகளை லோகோபகாரமாகச் செய்தல் வேண்டும்;

பிறகு பெரிதாயும் எண்ணெயால் நிறைந்த துகளாயும் அவியா ததுகளாயும் நல்ல வர்த்தியால் தூண்டப்பட்டிருக்கிறதாயு முள்ள ப்ரகாசிக்கிற தீபங்களால் ஆராத்திரிகத்தைச் செய்யவேண்டும்.

எவ்விதமாய் அவயவமானது விபூதியாற் பூசப்படுமோ அவ்விதமாய்த் திலகவடிவமல்லது திரிபுண்டராகிருதியாகவாவது பூசிப் பிறகு தூப தீப நைவேத்யம் பலியிடுதல் செய்து நடுவே ஆசமநங்கொடுத்து அருகில் நின்று நமஸ்கரித்துப் பின்பு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும்.

ஆவரண பூஜை.

பின்பு ஆஞ்ஞையுடன் வெளியில் ஆவரணத்தைப் பூஜித்தல் வேண்டும்.

கர்ணிகையில் ஈசான மூர்த்தியையும், கிழக்கிதழில் தத்புருஷ மூர்த்தியையும், தெற்கிதழில் அகோரமூர்த்தியையும், வடக்கிதழில் வாமதேவமூர்த்தியையும், மேற்கிதழில் சத்யோஜாத மூர்த்தியையும் புஷ்ப முதலியவைகளாற் பூஜித்தல்வேண்டும். இவ்விதமாய் ஐந்திதழ்களையும் ஐந்து முகங்களோடு கூடியதாய் விந்யசித்தல் வேண்டும்.

பத்துக் கைகளோடும் சந்திர கிரீடங்களோடும் சிறந்த ஆயுதங்களையுந் தரித்திருக்கிற சதாசிவ ஸ்வரூபங்களை த்யாநிக்கத் தக்கது.

ஈசான்யத்தில் நேத்ர மந்திரத்தையும், ஆக்நேயம் ஈசான்யம் நைருதி வாயு வென்னும் நான்கு உபதிக்குகளிலும் இருதயம் சிரோ சிகா கவசம் என்னு மந்திரங்களையும், கிழக்கு முதலாக நான்கு திக்குகளிலும் அஸ்த்ர மந்திரத்தையும் க்ரமந் தவறுமற் பூஜிக்க வேண்டும்.

இருதய மந்திரம் சந்த்ரவர்ணம், சிரோமந்திரம் கோரோசனை நிறம், சிகாமந்திரம் மின்னல் நிறம், கவச மந்திரம் நாலு பக்கமும் சூழ்ந்த புகை நிறம், அஸ்த்ர மந்திரம் கபிலநிற மென்றுந் தியானிக்க வேண்டும். நடுவிலுள்ள நேத்திர மந்திரத்தைச் சோதிருப ப்ரகாசமாகத் தியானித்தல் வேண்டும்,

இம் மந்திர தேவர்கள் யாவரும் ஐந்து முகங்களும் பத்துக் கைகளும் வுடையவர்கள். சந்திரனுலும் அநேக ஆபரணங்களாலும் அநேக மாலைகளாலும் சந்தனத்தாலும் அலங்கரிக்கப் பட்டவர்கள்;

பதினறு வயதையும் நல்ல ரூபத்தையும் தளராத யௌவனத்தையும் நிர்மலமான முகத்தையும் சாந்தத்தையும் மூன்று நேத்திரத்தையும் ஸ்வஸ்திகாசனத்தையு முடையவர்கள்.

இவர்கள் பரமசிவத்தின் சிரோ மந்திரம் இருதய மந்திரம் முதலானவைகளால் வரவழைக்கத் தக்கவர்கள். இவர்களை இவ்வாறு பூஜிக்காவிடின், ஆசிரியர் ஈசானதிக்கில் நேத்ரமந்திர ஸ்வரூபமான ஈசான மந்திரத்தைப் பூஜிக்கவேண்டும்.

இவ்வாறு பரமசிவத்திற்கு நான்கு பக்கத்தினும் கர்ப்பக்ரஹ ப்ராகாரத்தைப் பூஜித்தல்வேண்டும். அன்றியும் இவ்விடத்து வாம முதலான நவசக்திகள் பூஜிக்கத் தக்கவர்கள்.

பரமசிவத்தின் மடியில் வீற்றிருக்கிற மனோன்மனி யென்னும் ஆதிசக்தியைப் பூஜித்தல் வேண்டும். இந்த ஆவாஹன முதலிய சமஸ்தங்களையும் அதனதன் மந்திரங்களால் முறையாகப் பூஜித்தல் வேண்டும். இவைகட்கு அவகுண்டனம் அமிருதீகரணமின்றி ஆறுவித ஸம்ஸ்காரமெ பண்டிதர்களால் வெவ்வேறக ஏற்பாடு செய்யப் பட்டது.

ஸ்நபனமும் தீபங்களி னேற்பாடும் அங்கபாவத்தைக்கட்டுவது; வேறன்று.

இரண்டாவது ஆவரண பூஜை.

இரண்டாம் ஆவரணத்தில் அநந்தாதி வித்யேசுரர்கள் முறையாகப் பூஜிக்கத் தக்கவர்கள். அநந்தர் சூக்ஷ்மர் சிவோத்தமர் ஏக நேத்ரர் திரிமூர்த்தி ச்ரீகண்டர் சிகண்டி இந்த தேவர்கள் நான்கு முகமுள்ளவர்கள்; பரமசிவம்போல் பத்து புஜங்களை யுடையவர்கள்; அர்த்த சந்திரனைச் சிரசி லுடையவர்கள்; சாந்தர்கள்; தாமரச புஷ்பத்தி லிருப்பவர்கள்; நானவிதமான ஆயுதங்களை யுடையவர்கள்; கத்தி கேடயம் வில் பாணம் கமண்டலம் ஜபமாலை சூலம் தாமரச புஷ்பம் வரம் அபயம் இவைகளோடு கூடின கைகளையுடையவர்கள்; பூணூல்களை யுடையவர்கள்; ப்ரளயகாலச் சூரியர்களுக்குச் சமானமானவர்கள்; சிருஷ்டியில் பரமசிவத்தால் ஏவப்பட்டவர்கள்.

அநந்தர் கிழக்கு, சூக்ஷ்மர் தெற்கு, சிவோத்தமர் மேற்கு, ஏகநேத்ரர் வடக்கு, ஏக ருத்ரர் ஈசானம், திரிமூர்த்தி ஆக்நேயம், ஸ்ரீகண்டர் நிருதி; சிகண்டி வாயு என்னும் திக்குகளில் பூஜிக்கத் தக்கவர்கள்

மூன்றாவது ஆவரண பூஜை.

மூன்றாவது ஆவரணத்தில் பிரதமகணேசுரர்கள் குபேர திக்கு முதலாக வரிசையாய்ப் பூஜிக்கத் தக்கவர்கள்.

வடக்கில் – சிங்கவாகனத்தையும், மூன்று கண்களையும், மஞ்சள் நிறத்தையும் கண்ணாடியை உத்வகித்துக் கொண்டு மிருக்கிற அம்பிகையைப் பூஜிக்க.

ஈசானத்தில் – சுத்தமான வைடூர்ய நிறமும், உக்ரமும், புலித்தோலும், மூன்று கண்களும், சூலதண்ட கோடாலி வரம், அபயம் இவைகளைக் கையிலுடையவரும், அர்த்த சந்த்ரன் சர்பம் இவைகளால் பூஷிக்கப்பட்டவருமான சண்டேசரைப் பூஜிக்க.

கிழக்கில் – பத்மராகத்திற் கொப்பான காந்தி ; முக்கன் ; கையிற் சூலம் ; நாகயஞ்ஞோபவீதம் இவைகளையுடைவராயும், சாந்தராயு மிருக்கிற நந்தியைப் பூஜிக்க.

ஆக்நேயத்தில் – பச்சை நிறம், கையிற் சூலம், முக்கண், நாகயஞ்ஞோபவீதம் இவைகளையுடைய ருத்ர சம்பந்தமான மஹாகாளரைப் பூஜிக்க.

தெற்கில் – குள்ளமான வுருவம், யானை முகம், தன்னுடைய தந்தத்தைப் பிடித்தகை, கும்பச்சிரம், முறம் போன்ற காதுகள், மூன்று ஒட்டைச்சாண் பிரமாணமுள்ள மிருதுவான தும்பிக்கை, லட்டுபக்ஷணம், கோடாலி, ஜபமாலை யிவைகளையுடைய கைகள், மூன்று கண்கள், தாமரைப் பூவின் இலை நிறம் இவைகளையுடைய விநாயகரைப் பூஜிக்க.

தென்மேற்கில் – ருஷப வடிவம், முக்கண், குருக்கத்தி சந்திரன் பனி யிவைகளைப் போன்ற நிறம், சமஸ்த ஆதாரபூதத்தன்மை, தர்மாத்ம வடிவம் என்னும் இவைகளை யுடைய இடப தேவரைப் பூஜிக்க.

மேற்கில் – மாமிச மில்லாத சரீரமும், வெண்ணிறமும் உள்ள ப்ருங்கியைப் பூஜிக்க.

வாயுவில் – ஆறுமுகம், இளமைப் பருவம், பன்னிரண்டு கண்கள், பன்னிரண்டு புஜங்கள், சக்தி மணி கேடயம் தாமரைப்பூ பல்லவம் கோழி தண்டம் வரம் அபயம் வில் பாணம் பெரிய கோடாலி என்பவைகளை யுடைய சுப்பிரமணியரைப் பூஜிக்க.

சம்பத்தின் பொருட்டு ஒரு முகம் இரண்டு கைகள் அல்லது நான்கு கைகளோடு சக்திவேல் கோழி வரம் அபயம் இவைகளோடு கூடியவராகவும், பவளம் போன்ற காந்தியை யுடைய அந்தச் சுப்பிரமணியர் பலாபேக்ஷிகளால் பூஜிக்கத்தக்கவராக ஆகின்றார்.

இவ்வாறன்றி வேறுவிதமாயும் கணேச்வரர்கள் பூஜிக்கத் தக்கவர்கள். தேவி, சண்டேச்வரர், மஹாகாளர், இடபம், நந்திகேச்வரர், கணேசர், ப்ருங்கி, சுப்பிரமணியர் இவர்களை பத்மராகத்தோடு சமமான காந்தியை யுடையவர்களாகப் பூஜிக்க.

நான்காவது ஆவரண பூஜை.

நான்கா மாவரணத்தில் தத்தம் திக்குகளை யடைந்திருக்கிற திக்கு பாலகர்களை முறையே பூஜித்தல் வேண்டும்.

கிழக்கில் – ஐராவத வாகனம், மஞ்சள் நிறம், வஜ்ராயுதம், ஆயிரங் கண்கள் என்னு மிவைகளையுடைய தேவேந்திரனைப் பூஜிக்க.

தென்கிழக்கில் – ஒளி வீசுகிற மாலை, சத்தியாயுதம், ஆட்டுக்கிடா வாகனம் என்னு மிவைகளையுடைய அக்நி தேவனைப் பூஜிக்க.

தெற்கில் – எருமைக்கடா வாகனம், கறுத்த நிறம், கையிற் றண்டம என்னு மிவைகளையுடைய யமனைப் பூஜிக்க.

தென் மேற்கில் – கறுத்த நிறம், கையிற் கதை, நரவாஹனம் (பல்லக்கு) என்று மிவைகளையுடைய நிருதியைப் பூஜிக்க.

மேற்கில் – வெண்ணிறம், முதலை வாகனம், கையிற் பாசம் என்னு மிவைகளை யுடைய வருணனைப் பூஜிக்க.

வாயு திக்கில் – சித்திர வர்ணம், கையில் த்வஜம், மான் வாகனம் இவைகளை யுடைய வாயுவைப் பூஜிக்க,

வடக்கில் – மஞ்சள் நிறம், கையிற் கத்தி, குதிரை வாகனம் என்று மிவைகளையுடைய குபேரனைப் பூஜிக்க.

ஈசானத்தில் – கோரோசனை வர்ணம் (கபிலவர்ணம்), கையிற் சூலம், ருஷப வாகனம், முக்கண், தெளிவான திருமுகம், சந்தோஷப் பார்வை என்னு மிவைகளையுடைய ஈசானமூர்த்தியைப் பூஜிக்க,

கீழே பூமியில் – (கிழக்கிற்கும் ஈசானத்திற்கும் இடையே) கறுத்த நிறம், கருடவாகனம், கையிற் சக்கரம் என்னு மிவைகளை யுடைய திருமாலைப் பூஜிக்க.

மேலே ஆகாயத்தில் – (நிருதிக்கும் மேற்கிற்குய் இடையே) சிவந்த நிறம், அன்னவாகனம், கையிற்றாமரையு முடைய ப்ரம்மாவைப் பூஜிக்க. தத்தம் நாம முதலிய அக்ஷரங்களால் இவர்கள் யாவரும் பூஜிக்கத் தக்கவர்கள்.

ஐந்தாம் ஆவரணப் பூஜை.

ஐந்தா மாவரணத்தில் அஸ்திர சமுகங்களைச் சாத்திரவிதிப் படிப் பூஜிக்க வேண்டும்.

கிழக்கில் – மஞ்சள் நிறம் அறுகோண வஜ்ராயுதம்,
ஆக்நேயத்தில் – மிகவும் சிவந்த நிறமுள்ள சத்தியாயுதம்,

தெற்கில் – கறுத்த நிறமுள்ள தண்டம்,
தென்மேற்கில் – கறுத்த நிறமுள்ள கத்தி,
மேற்கில் – வெளுத்த நிறமுள்ள பாசம்,
வாயுவில் – சித்திர த்வஜம்,
வடக்கில் – பொன்னிறமான கதாயுதம்,
ஈசானத்தில் – ஜ்வலித்துக்கொண்டிருக்கிற சூலாயுதம்,
அடியில் – சூரியனைப் போன்ற காந்தியை யுடைய சக்ராயுதம்,

மேற்பாகத்தில் – வெண்டாமரைப் பூ இவைகளை முறையே ஜிக்க. இவ்வாறு பஞ்சாவரண பூஜையானது சுருக்கமாகச் சால்லப்பட்டது.

ஏகாவரணமானது அங்கமந்திரங்களாலும் பஞ்ச ப்ரம்ம மந்தி ங்களாலும் பூஜிக்கவேண்டும். அற்றேல் தனியே அங்கமந்திரம் ல்லது தனியே பஞ்ச ப்ரம்ம மந்திரம்; அல்லது பஞ்சப் பிரும்மாங்க ன்னும் இரண்டுஞ் சேர்ந்த மந்திரம் என்பவைகளாலும், லோக லகர்கள் அஸ்திரங்கள்; அல்லது அஸ்திரங்களோடு சேர்ந்திருக் ம லோகபாலகர்கள் என்னும் ஆவரணத் திரயம் பூஜித்தல் வண்டும்.

பிறகு பஞ்சப் பிரம்ம மந்திரம் அங்கமந்திரம் அஷ்ட வித்யேசர் காதச ருத்ரர் இவர்களை சந்தனம் முதலானவைகளால் உள் ஆவரணக் கிரமமாகப் பூஜித்தல் வேண்டும்.

வெளியாவரணப் பூஜையைப் பரிவார தேவதையின் பூஜா தியில் புத்திமான் அறிகிருர்கள்.

இவ்வாறு ஆவரணத்தைப் பூஜித்து உத்தமமான நைவேத் த்தைக் கொடுத்தல் வேண்டும்.

நைவேத்யம்.

நைவேத்யம் ஐந்துமுகங்களிலும் கொடுத்தல் வேண்டும், அவ் ாறன்றி மேல்முகத்திலும் கொடுக்கலாம். சமஸ்த அங்கங்களுக்கும் நவெத்யம் முன்னிற் பாயதிளவாக வேருனதாகும். ப்ரத்யேக த்திரங்கள் கிடைக்குமாளுல் அவிசைத் தனித்தனியே பாகஞ் சய்யத் தக்கது. அவ்வாறு ப்ரத்யேக பாத்திரங்களில்லாவிடின் பரி த்தமான ஏக பாத்திரத்தில் சமைத்த அன்னத்தைத் தனித்தனியே வத்தல் வேண்டும்.

த்வாரபாலகர் முதல் வெளியாவரணத்தி லிருக்கிற தேவதை ட்கு, வேவ்வேருக சந்தனம் புஷ்பம் முதலியவைகளால் பூஜிக்க வண்டுமென்று விதிக்கப்படுகிறது.

பலி ஹோம தாம்பூலம்.

பூத முதலான கணங்களின் பொருட்டு பலியைக் கொடுத்துப் பிறகு மந்திர பூர்வமான நைவேத்யம் சொடுக்கவேண்டும். அதன் முடிவில் மறுபடியும் உள்ளாவரணத்தை யடைந்து நிந்ய ஹோமம் செய்யத்தக்கது. பிறகு ஹஸ்த ப்ரக்ஷாளன பூர்வமாக ஆசமனத்தைக் கொடுத்து, தேவர்கட்குந் தகுதியும் முகப்பழக்கமுமான தாம்பூலத் தையும் கொடுக்கவேண்டும்.

உபசாரம்.

அப்பொழுது ஸ்ரீமத் பஞ்சமஹா சப்தம் கண்ணுடி கொடை விசிறி வெண்சாமரங்களாலும், பாட்டு நிருத்தம் ஜபம் தோத்திரங் களாலும் அந்தச் சிவபெருமானை சந்தோஷிப்பித்தல் வேண்டும்.

பவித்ரம்

சந்தோஷமுள்ள உமையவளோடு வீற்றிருப்பவராயும், சக்தி ஸ்வரூபராயுமுள்ள சதாசிவரை த்யானித்து அவர் சிரஸில், கர்மங் களைப் பூர்த்தி செய்வதான பவித்திரத்தைச் சாற்றல் வேண்டும்.

